RE/MAX Realtron Blue Force
Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 05 மே 2023 இதழ்:- 02

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!

## உறவுகளே! மே மாதம் 09 முதல் 31 வரை உணவளிக்க தயவு செய்து முன் வாருங்கள்!

# தையிட்டி விகாரை:- பொலிஸ் தடைகளை மீறி சுமந்திரன், மாவை ஆகியோர் உள்நுழைவு!



யாழ்ப்பாணம் தையிட்டி விகாரையை அகற்ற கோரி பொலிஸ் முற்றுகைக்குள் போராட்டம் நடாத்தி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்டவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்கள் நேரில் சந்தித்து தமது ஆதரவை தெரிவித்து கலந்துரையாடினர். (3ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சி இலங்கையில் உருவாகுமா?



உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அறிவித்ததைத் தொடர்ந்து, தற்போதைய சமூக நிலை தொடருமா என்ற கேள்வி பல்வேறு மட்டங்களிலும் எழுந்திருக்கின்றது. உள்நாட்டு கடன்களை( 19ம் பக்கம் பார்க்க).



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct: 416-624-7971 Office: 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Phone: (416) 321-0110
Mortgage Alliance

THINKING OF
# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Lawrence/ Galloway**

Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


**Finch & Pharmacy**

Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area


**Yonge/Finch**

Toronto $579,000
Bedrooms: 1 Washrooms: 1
Luxurious Bright & Spacious unit


**Bowmanville /Northglen**

Clarington $699,000
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Townhouse

**Eglinton/Markham**

Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Low Maintenance Free

**Queens Quay & Lower Sherbourne**

Toronto $874,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit


**Steeles/Mclaughlin**

Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
A Quiet Family Neighborhood


**River Street & Highway 12**

Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement

**Meadowvale / 401**

Scarborough $1,998,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

**Sandalwood & Richvale**

Brampton $675,000
Bedrooms: 3 Washrooms: 2
Call for more info

**Eglinton/Sloane**

Toronto $539,000
Bedrooms: 1 Washrooms: 1
Doubble Closet & Open Balcony.

**Danforth & Eglinton Ave**


Toronto $456,500
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept With Modern Kitchen

**Keele/Sheppard**

Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

**Mccowan & Ellesmere**
FOR LEASE

Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

**Liverpool & Commerce S**
FOR LEASE

Pickering $2,700
Bedrooms: 3 Washrooms: 1
Close To Parks

**Birchmount/Ellesmere**
FOR LEASE

Scarborough $2,400
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இந்துக் கோவில்கள் மீதான ஆக்கிரமிப்பை ஆவணப்படுத்திய அமெரிக்கா! முதன் முறையாக சிறப்புக் கண்காணிப்பு பட்டியலில் இலங்கையும் சேர்ப்பு



இலங்கையில் மத சுதந்திரம் கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் மத சுதந்திர நிலைமைகள் கரிசனை அளிக்கும் பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை முதல் முறையாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சிறப்பு கண்காணிப்பு நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைக்கப் பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இலங்கையில் கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மதச் சுதந்திரத்தின் கடுமையான மீறல்களுக்கான போதுமான ஆதாரங்களை சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடு, பிரச்சனைக்குரிய சட்டத்தைப் பயன்படுத்தி இலக்கு வைக்கப்பட்ட கைதுகள், நிலம் மற்றும் சொத்துக்களை கையகப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு அரச எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்ட சிறுபான்மையினரை குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் விசாரணை செய்து, கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 300 முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குற்றஞ் சாட்டப்படாமல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு கிழக்கில் பாதுகாப்பு அமைச்சு தலைமையில் தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளுடன் இணைந்து பௌத்த புராதன சின்னங்களை பழுதுபார்க்கும் மற்றும் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னர் பௌத்த மக்களே இல்லாத இடங்களில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயற்பாடுகள் இந்து மற்றும் முஸ்லிம் மக்களை சுரண்டும் வகையில் உள்ளதாகவும் சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணைக்குழு கூறியுள்ளது.

இதன் மூலம் பிராந்தியத்தில் மக்கள் தொகையை மாற்றியமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பான அச்சத்திற்கு வழி வகுத்துள்ளது எனவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக் கூட்டணி, கடந்த ஜனவரி மற்றும் ஒகஸ்ட் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்துக் கோயில்கள் மீதான ஆக்கிரமிப்பு தொடர்பான பல சம்பவங்களை ஆவணப்படுத்தியது எனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு புறம்பாக விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டதையும் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் பௌத்த பிக்குகள் புதிய புத்தர் சிலையை வைப்பதற்கு முயற்சித்த சம்பவத்தையும் அமெரிக்கா தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# தையிட்டி விகாரை:- பொலிஸ் தடைகளை மீறி சுமந்திரன், மாவை ஆகியோர் உள்நுழைவு



யாழ்ப்பாணம் தையிட்டி விகாரையை அகற்ற கோரி பொலிஸ் முற்றுகைக்குள் போராட்டம் நடாத்தி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்டவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்கள் நேரில் சந்தித்து தமது ஆதரவை தெரிவித்து கலந்துரையாடினர்.

விகாரையை அகற்ற கோரி புதன் கிழமை (3) முதல் வெள்ளிக்கிழமை (5) வரையில் விகாரை முன்பாக தொடர் போராட்டத்தினை முன்னெடுக்கும் நோக்குடன் நாடாளுமன்ற உறுப்பினர் செ கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

அந்நிலையில் நேற்றைய தினம் இரவு அவ்விடத்தற்கு வந்த பொலிஸார் போராட்டக்காரர்களின் கொட்டகையை அங்கிருந்து பிடுங்கி அகற்றினர். அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இங்கிருந்து விலகி செல்ல வேண்டும் இல்லையெனில் அனைவரையும் கைது செய்வோம் என கூறி பலரை வலுக்கட்டாயமாக அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

அதேவேளை வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி , போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வேறு எவரும் செல்ல முடியாதவாறு தடைகளை ஏற்படுத்தினார். பொலிஸாரின் மிரட்டல்களை செவி சாய்க்காது நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் உள்ளிட்ட சிலர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கான உணவு நீர் மற்றும் மருந்து ஆகியவற்றை வழங்கவும் பொலிஸார் அனுமதிக்கதாக நிலையில் சுமார் 7 மணி நேரத்தின் பின்னர் மனிதவுரிமை ஆணைக்குழு உள்ளிட்டவர்களின் அழுத்தங்கள் காரணமாக நேற்றைய தினம் வியாழக் கிழமை அதிகாலை 1.30 மணியளவிலையே உணவு வழங்க அனுமதிக்கப்பட்டது. அதே நேரம் அப்பகுதியில் நின்ற பெண் உள்ளிட்ட ஐவரை எந்தவிதமான(22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
இணைந்து வழங்கும்
மேமாதம் 13 சனிக்கிழமை
மாலை 3 மணிக்கு
17ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
ஆறுமுக நாவலர் அரங்கில்
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.




கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough
Fashion World Inc
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5
குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA
416.728.5772
Thana Manickavasagar
Shop for Auto Parts
747 AUTOPARTS
Markham 905.471.4447
Scarborough 416.285.4447
DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough
ரங்கனாஸ் நகைமாடம்
647.702.2159
TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke (Albion & Islington) 647-352-2229
Scarborough (Kennedy & Shropshire) 416.757.9111
Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த கட்டணத்தில் பெறுவதன் மூலம் மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel
Caaveri Enterprise
99 Select Ave.
Scarborough, ON M1V 4A8
(416) 412-1701
MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN) THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca
பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
416-752-3112 416-738-1271
SHY ENTERPRISE
Retailer of Paper Products
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box.
Garbage Bags
Paper Towels
Toilet Papers.
Napkins
All kind of Plastic Bags
416.602.9714 • 905.205.0011
ERAA SUPER MARKET

# பேச்சை நிறுத்தி செயலில் காட்டுங்கள்! ஜனாதிபதியிடம் மனோகணேசன் இடித்துரைப்பு!

இந்த வருட இறுதிக்குள் இனப் பிரச்சினை தீர்வு பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம் என்கிறார் ஜனாதிபதி. இதையிட்டு மகிழ்ச்சியடை கிறோம். ஆனால் இக்கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்து க்கு முன்னிருந்து சொல்லி வரு கிறீர்கள். பெப்ரவரி நான்காம் திகதி யளவில் தீர்வு காண்போம் என்றும் கூறினீர்கள்.

இப்போதும் மீண்டும், மீண்டும் கூறுகிறீர்கள். இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப்பிரச் சினை தொடர்பில், உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம் தயார். ஆனால் இனி நீங்கள் பேச்சை நிறுத்தி செயலில் காட்டு ங்கள். வோக் யுவர் டோக் மிஸ்டர் பிரசிடென்ட்! (பேச்சின்படி நட ந்து காட்டுங்கள்!) என தமிழ் முற் போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறி வுரை கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் மேதின செய்தி உரை தொடர்பில் மனோஎம்பி கூறியுள்ள தாவது, இலங்கையில் இன்று இரு க்கும் பெரும்பான்மை கட்சி தலைவர்கள் மத்தியில், தேசிய இனப்பிரச்சனை தொடர்பில் காத் திரமான முயற்சிகளை எடுத்தவர், ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரை பற்றி சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும் ஜனாதிபதியாக விக்கிரம சிங்க நியமனம் பெற்ற பின் பல முறை இந்த கால அட்டவணை க்குள் இனப்பிரச்சினை தீர்வு என பலமுறை கூறி விட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும்.



சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற் கட்டமாக 13ஐ பற்றி பேசிய போது அதுவரை ஒளிந்திருந்த ஆமதுருக்கள் தெருவுக்கு வந் தார்கள். அத்துடன் அது நின்று போய் விட்டது.

இன்று அரகல போராட்டத்துக்கு பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு, சர்வதேச சமூக த்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு ஜனாதிபதி விக்கிர மசிங்க, இனப்பிரச்சினை தீர்வு பற்றி, தமிழ் கட்சிகளை அழை த்து பேச முன் சிங்கள கட்சிகளை அழைத்து நாட்டின் உண்மை நிலைமை பற்றி பேச வேண்டும். சிங்கள மக்களை விளித்து நேரடி யாக கூற வேண்டும். இனி மேலும் இதை தள்ளி போட முடியாது என எடுத்து கூற வேண்டும். சர்வதேச சமூகமும் அதற்கு சாதக மாக நடந்து கொள்ளும் என நான் அறிகிறேன்.

தற்போது நிலைமையை பாரு ங்கள். இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்சினை தீர்வு பொரு ளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்'' என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு கிழக் கில் காணி பறிபோகிறது. தொல் பொருள்திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகி விட்டது. சிவனை தூக்கி கடாசி விட்டு, ஆமதுருக்கள் இராணுவ துணை யுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கிறர்கள். காவி உடையில் அரசியல் செய்யும் ஆமதுருக் களை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு இது தான் வேளை இல்லாவிட்டால் கடும் பதட்ட நிலைமை வடக்கு கிழக் கில் விரைவில் உருவாகும்.

மலைநாட்டில், வந்தவன், போன வன் எல்லாம் அடாத்தாக தோட்ட காணிகளை பிடிக்கிறான். ஆனால், 200 வருட வரலாற்றை தொட்டு விட்ட பெருந்தோட்ட மக்களுக்கு வாழ, பயிர் செய்ய காணி இல்லை. மலையக தமிழருக்காக நான் குரல் கொடுத்தால் என்னை தேயிலை கொழுந்து பறிக்க வந்த வன் என்கிறார்கள். தோட்டகாட் டான் என்கிறார்கள். இது மலை நாட்டு பெருந்தோட்ட பகுதிகளில் கடும் பதட்ட நிலைமையை மெதுவாக உருவாக்கி வரு கிறது என்றார்.

# தையிட்டி விகாரைக்கு எதிராக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இருந்து கூட்டாக வெளியேறிய எம்.பி.கள்



யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலிருந்து நேற்று 04 மே 2023 வியாழக்கிழமை கூட்டாக வெளிநடப்பு செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வலிகாமம் வடக்கு தையிட்டி விகாரை பகுதிக்கு கூட்டாக சென்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் சி.சிறிதரன், த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்டோர் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து விகாரையை பார்வை யிட்டதுடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாராளு மன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்டவர் களுடனும் கலந்துரையாடி போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினர்.

யாழ் மாவட்ட செயலகத்தில் இன்று யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம்பெற்றது. சம காலத்தில், காங்கேசன்துறை தையிட்டியில் அனுமதியின்றி கட்டப்பட்ட விகா ரைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற உறுப்பி னர் உள்ளிட்ட மக்களால் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அவர்களை பாதுகாப்பு தரப்பு முற்றுகையிட்டு ள்ளமையை கண்டித்தும், மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அனுமதியின்றி அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வெளிநடப்பு செய்வதாக சுமந்திரன் எம்.பி. கூட்டத்தில் அறி வித்தார்.

இதனையடுத்து சக பாராளுமன்ற உறுப்பினர் களான சி.சிறிதரன், த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தி லிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இந்நிலையில் கூட்டாக வெளிநடப்பு செய்த பாராளு மன்ற உறுப்பினர்கள் வலிகாமம் வடக்கு தையிட்டி விகாரை பகுதிக்கு கூட்டாக சென்றிருந்தனர்.

இதேவேளை தையிட்டி விகாரையை சூழவுள்ள வீதிகளில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார், உழவு இயந்திரங்களில் முட்கம்பிகள், வீதி தடை கம்பிகள் என்பவற்றை வீதிகளில் போட்டு, வீதி தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

அதேவேளை பெருமளவான இராணுவம் துப்பாக்கி களுடன் விகாரையை சூழவுள்ள பகுதிகளில் குவிக்கப்பட்டு கடுமையான பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது.

தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகா ரையை அகற்றுமாறு கோரி தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரணாகொட அமெரிக்கத் தூதுவருக்கு கடுமையான கடிதம்!



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கு கடுமை யான கடிதமொன்றை எழுதியுள்ள இலங்கையின் முன்னாள் கடற் படை தளபதி அமெரிக்க தூது வர் தனதும் தனது குடும்பத்தி னதும் உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார் என குறிப்பிட்டு ள்ளார்.

45 வருட குற்றமற்ற அரசசேவை யின் மூலம் நான் ஏற்படுத்திக் கொண்ட கௌரவத்திற்கு நீங்கள் சுமத்தியுள்ள தவறான குற்றச் சாட்டுகள் கடும் பாதிப்பை ஏற் படுத்தியுள்ளன என தனது கடிதத்தில் தெரிவித்துள்ள வசந்த காரனகொட ஐசிசிஆர்பியின் 17 வது பிரிவின் கீழ் உங்கள் நடவடிக்கைகள் எனது உரிமை மீது நேரடியாக தலையிடுகின்றன எனவும் அமெரிக்க தூதுவருக் கான கடிதத்தில் தெரிவித்துள்ளார்

இலங்கையின் சட்டங்களின் அடிப் படையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டமை தொடர் பான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து இதற்காக தான் நியாயம் கேட்கவுள்ளதாக வசந்த கரணாகொட தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தனக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர் பில் எனது கருத்தினை கேட்க வில்லை என அமெரிக்க தூதுவருக்கு அனுப்பி வைத்து ள்ள கடிதத்தில் வசந்தகரணா கொட தெரிவித்துள்ளார்.

வசந்த மீதான தடை ஜூலி சங் முன் கூட்டியே அலிசப்ரிக்கு தெரி வித்தார் என டெய்லிமிரரில் வெளி யான விடயத்தை சுட்டிக்காட்டி யுள்ள வசந்தகரணாகொட நீங்கள் (அமெரிக்க தூதுவர்) முன் கூட்டியே வெளிவிவகார அமைச்ச ருக்கு தெரிவித்த போதிலும் இது குறித்து எனக்கு தெரிவிக்க வில்லை எனவும் தனது கடிதத் தில் தெரிவித்துள்ளார்.

# தமிழரசுத் தலைமைக்கு 3 பேர் கடும் போட்டி -மாவை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் ஆகியோர் அப் பதவிக்கு குறிவைத்துள்ளதாகவும், அவர்களோடு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி. கே.சிவஞானமும் தலைமைப் பதவி க்கு குறி வைத்துள்ளதாக தமிழர சுக் கட்சியின் தலைவரும் மூத்த அரசியல்வாதியுமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்



கிய நேர்காணலின் போதே தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறு போட்டி நிலவுகின்றது என மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தலைமைப் பதவி குறித்த நகர்வு களில், சிறிதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கடந்த தேர்தலின் போதே களமிறங்கி விட்டதாகவும், சுமந்தி ரனை வெல்ல வைப்பதற்கு, சிறி தரன் உதவியமைக்கான காரணமும் தலைமைப் பதவியைக் குறி வைத் ததாகவே அமைந்தது என்றும் மாவை சேனாதிராசா குறிப் பிட்டுள் ளார்.

தலைமைப் பதவியைக் குறி வைத்து இம் மூன்று பேரும் பல் வேறு நகர்வுகளில் ஈடுபட்டு வருவ தாகவும் சேனாதிராசா தெரிவித்தார்.

# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்திற்கு சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழு விஜயம்!

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்திற்கு சட்டத்தரணிகள் குழு 30 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்தனர். வவுனியா வடக்கு, ஓலுமடு ஆதி சிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீள பிரதிஸ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்து வெள்ளிக்கிழமை ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றிருந்தன. சுபநேரத்தில், விக்கிரகங்கள் அனைத்தும் மீண்டும் வைக்கப்பட்டன. பல சிரமங்களுக்கு மத்தியில், புதிய விக்கிரகங்கள், மலையின் உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டன.





இதில், ஆலய நிர்வாகத்தினர், பூசாரியார், சமூக ஆர்வலர்கள், வேலன் சுவாமிகள், அகஸ்தியர் சுவாமிகள், அரசியல் தரப்பினர், இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், விக்கிரங்கள் வைப்பு செய்யப்பட்டமை மற்றும் ஆலயத்தின் தற்போதைய நிலமை தொடர்பில் பார்வையிடுவதற்காக குறித்த வழக்கில் ஆலயம் சார்பிலும் பாதிக்கப்பட்ட தரப்புக்கள் சார்பிலும் மன்றில் ஆஜராகி வாதப் பிரதி வாதங்களை முன்வைத்த சட்டத்தரணிகள் குழு விஜயம் செய்திருந்தனர்.

இதில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், வவுனியாவின் சிரேஸ்ட சட்டத்தரணி தி.திருஅருள், சட்டத்தரணிகளான திலீப் காந்தன், கீர்த்தனன், இளஞ்செழியன், திபின்சன் உள்ளிட்ட சட்டரத்தரணி குழுவினர் சென்றிருந்தனர்.

இவர்களுடன் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சீ.வீ.கே.சிவஞானம், ஜி.ரி.லிங்கநாதன், சுகிர்தன், கேசவன் சயந்தன், ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வெடுக்குநாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்து செல்ல வேண்டும் அதனை மதித்து அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலைக்கு ஞாயிற்றுக்கிழமை (30) விஜயம் செய்த அவர் ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தினை பார்வையிட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட பின்னர். கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் இரு கட்டளைகள் வழங்கப்பட்டதற்கிணங்க அந்த விக்கிரகங்கள் மீளவும் பிரதிஸ்டை செய்யும் செயற்பாடு இடம் பெற்றிருக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. எனவே நீதிமன்றில் தவறான கருத்துக்கள் ஏதும் சொல்லப்பட்டால் அதற்கு பதில் அளிக்கும் விதமாக ஞாயிற்றுக் கிழமை (30) நேரிலே ஆலயத்திற்கு சென்று விடயங்களை அவதானித்துள்ளோம். இது மகிழ்ச்சியான விடயம்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களின் அடையாள அட்டைகள் பதிவு செய்யப்பட்டமை தேவையற்ற ஒரு விடயம். ஞாயிற்றுக்கிழமை (30) அவ்வாறான நடவடிக்கை இடம்பெறவில்லை. பொதுமக்கள் சுதந்திரமாக வந்து செல்வதற்கு இடமளிக்க வேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது. அதனை மதித்து அனைத்து அரச உத்தியோகத்தர்களும் செயற்பட வேண்டும். செயற்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார்.



# கந்தரோடையில் சொந்தக் காணியில் விகாரை கட்ட அனுமதி கோரும் பிக்கு!

யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் தனியார் காணியொன்றினை கொள்வனவு செய்துள்ள பௌத்த பிக்கு ஒருவர், அக்காணியினுள் விகாரையொன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம், கந்தரோடை பகுதியில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்களும் அதன் எச்சங்களும் காணப்படுகின்றன. அவை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

இந்நிலையில், தமிழ் பௌத்த எச்சங்கள் காணப்படும் இடத்துக்கு அருகில் நபரொருவருக்கு சொந்தமான சுமார் 6 பரப்பு காணியினை தென்னிலங்கையை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் ஒரு வருடத்துக்கு முன்னர் பணம் கொடுத்து வாங்கியுள்ளார்.

அதனையடுத்து, அந்த பிக்கு குறித்த காணிக்குள் தான் விகாரை ஒன்றை அமைக்கவுள்ளதாக தெரிவித்தும், விகாரை அமைப்பதால் காணிக்கு அருகில் உள்ள தொல்லியல் எச்சங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா, குறித்த காணியில் விகாரை அமைக்கலாமா என அனுமதி கோரியும் தொல்லியல் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில், தொல்லியல்



திணைக்களம் விகாரை அமைக்க அனுமதி வழங்கியவுடன், ஏனைய அனுமதிகளை விரைந்து பெற்று, விகாரை கட்டுமான பணிகளை தான் விரைந்து நிறைவேற்ற பிக்கு தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்ஸில் கைதான இரத்மலானே குடு



பிரான்ஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பாரிய போதைப்பொருள் கடத்தல்காரரும் பாதாள உலகத் தலைவனுமான 'இரத்மலானே குடு அஞ்சு' என அழைக்கப்படும் சிங்கரகே சமிந்த சில்வாவை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல கொலைகளில் சந்தேக நபராக கருதப்படும் 'குடு அஞ்சு' என்பவரை பிரான்ஸ் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளதாகவும், பிரான்ஸ் பாதுகாப்பு தரப்பினர் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தியோகபூ ர்வமாக இதனை அறிவித்துள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

குடும்பத் தகராறு தொடர்பாக அவரது மனைவி பிரான்ஸ் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், 'குடு அஞ்சு' கைது செய்யப்பட்டதாக கூறப்படும் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி, இவரை நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# 840,000 அமெரிக்க டொர்கள் மோசடி! இலங்கை மருத்துவருக்கு 4வருட சிறை

அமெரிக்காவின் ஸ்ட்ராட்ஃபோர்ட் நகரில் மருத்துவ நிலையம் ஒன்றை நடத்தி வந்த இலங்கை மருத்துவர் ஒருவர், சுகாதார சேவைகளை வழங்குவதாக தெரிவித்து அந்நாட்டு அரசாங்கத்திடமிருந்து சுமார் 840,000 அமெரிக்க டொலர்களை பெற்று, மோசடி செய்த குற்றத்துக்காக அவருக்கு பிரிட்ஜ்போர்ட் நீதிமன்றமொன்று நான்கு வருட சிறைத்தண்டனை விதித் துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த குறித்த மருத்துவர் கடந்த நவம்பரில் மோசடி குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதால் தண்டனை நிலுவையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மெடிகெயார் என்ற மருத்துவ கிளினிக்கின் உரிமையாளரும் தலைவருமான இவர், தனது மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்கு மனநல சேவைகளை வழங்குவதற்காக மாநில மருத்துவ காப்பீட்டிலிருந்து சுமார் 840,000 அமெரிக்க டொலர்களை பெற்று மோசடி செய்தார் என குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

# யாழ்ப்பாணத்தில் 16 மாதங்களில் 11 சிறுவர்கள் தற்கொலை!

கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாணத்தில் 18 வயதிற்கு உட்பட்ட 11 சிறுவர்கள் தவறான முடிவினை எடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸாரின் புள்ளிவிபரம் ஊடாகவே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

குறித்த தகவலின் பிரகாரம் மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு 175 பேர் தவறான முடிவெடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர். இவர்களில் 09 பேர் 18 வயதிற்குள் உட்பட்ட சிறுவர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 116 பேரும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 59 பேரும் உயிர் மாய்த்துள்ளனர்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரம் வரையிலான கால பகுதியில் 54 பேர் உயிரை மாய்த்துள்ளனர். அவர்களில் இருவர் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 39 பேரும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 15 பேரும் உயிரை மாய்த்துள்ளனர்.

அதேவேளை இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 50 பேர் உயிர் மாய்க்க முற்பட்ட நிலையில் உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது உயிரை மாய்க்க முற்படுவது தண்டனைக்கு உரிய குற்றம் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் "லொபி"யின் தோல்வி?

அண்மைக் காலமாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவ்வப்போது சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் பேசி வருகின்றனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஒற்றையாட்சியை நீக்குவது தொடர்பில் பலமுறை ஐ. எம். எவ்விடம் முறையிட்டும் பயனில்லை என்கின்றார்.

தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஐ. எம். எவ். இனப்படுகொலைக்கு துணை போவதாகக் கூறுகின்றார்.

இதன் மூலம், தாங்கள் தமிழ் மக்களுக்கு நன்மை செய்து கொண்டிருப்பதாகவே இவர்கள் எண்ணிக் கொள்கின்றனர். ஆனால், விடயம் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினர் ஐ. எம். எவ். தொடர்பில் அலட்டிக் கொள்ளவில்லை.

இதே போன்று, புலம்பெயர் அமைப்புகள் சிலவும் ஐ. எம். எவ்வுக்கு அழுத்தம் கொடுக்க முடியுமென்று நம்பிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இது தொடர்பில் 'ஈழநாடு' முன்னரும் குறிப்பிட்டிருக்கின்றது.அதாவது, ஐ.எம். எவ்விடம் இனப்பிரச்சனைக்கான அழுத்தங்களை எதிர்பார்ப்பது அதன் கொள்கை நிலைப்பாடுகள் தொடர்பான அறியாமையாகும்.

ஐ. எம். எவ். தொடர்பில் உரத்துப் பேசி வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொஞ்சமாக விடயங்களை படிக்க வேண்டும் அல்லது அது தொடர்பில் அறிவுள்ளவர்களிடம் விடயங்களை கேட்டுத் தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

ஐ. எம். எவ்விடம் பல தடவைகள் முறையிட்டோம் பலனில்லையென்று ஒப்பாரி வைக்கும் போது அதே போன்று ஐ. எம். எவ். கண்டு கொள்ளவில்லை என்று ஒப்பாரி வைக்கின்றோம் என்றால் ஒரு விடயம் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

அதாவது, யுத்தம் நிறைவுற்று 14 வருடங்களுக்கு பின்னரும் கூட இப்போதும் மற்றவர்களிடம் முறையிட்டுக் கொண்டு தான் இருக்கின்றோம் என்றால், எங்களுக்குள் நாங்கள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி என்ன?

கடந்த 14 வருடங்களாக நாங்கள் உலகில் மேற்கொண்ட அரசியல் 'லொபி'களுக்கு என்ன நடந்தது? எங்களுடைய லொபிகளை மேற்குலகம் கண்டு கொள்ளவில்லையா ஏன் அவர்கள் கண்டுகொள்ளவில்லை? அல்லது எங்களுக்கு லொபியை சரியாக முன்னெடுக்கத் தெரியவில்லையா? இந்தக் கேள்விகளுக்கு முதலில் நாம் பதிலைக் காண முயற்சிக்க வேண்டும்.

நாங்கள் மீண்டும் மீண்டும் மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துக் கொண்டிருக்கின்றோமே தவிர, அதற்கப்பால் எங்களால் நகர முடியவில்லை. குற்றச்சாட்டுகள் எங்களை மேலும் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

ஏனெனில் எங்களைத் தவிர மற்றவர்கள் அனைவரையுமே குற்றவாளிகளாக பார்ப்பதும் அவர்களை அவமானப்படுத்தும் வகையில் பேசுவதன் மூலம் தமிழ் மக்கள் எந்தவொரு நன்மையையும் பெற முடியாது.

மாறாக மேலும் உலகத்திடமிருந்து தமிழர்களை தனிமைப்படுத்தவே இவ்வாறான பேச்சுகளும் செயலும் பயன்படும்.

மற்றவர்களை குற்றம்சாட்டும் போது எங்களால் ஏன் முடியவில்லை ஏன் நாங்கள் தொடர்ந்தும் பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்? இந்தக் கேள்விகளுக்கான விடையை நாம் தேட வேண்டும். ஒரு வேளை அரசியல்வாதிகளுக்கு இதற்கான ஆற்றலில்லை என்றால் புத்திஜீவிகள் என்போரும் சிவில் சமூக பிரதிநிதிகள் என்போரும் இது தொடர் பில் சிந்திக்க வேண்டும்.


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்

423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்

12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்

28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை

# வடக்கு கிழக்கில் மீண்டும் மோதல் உருவாகும்! ஐ.நா.வின் பிரதிநிதிகளிடம் காரணம் சொன்ன சுமந்திரன்!



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்று வரும் காணி அபகரிப்பு, தொல் பொருள் வளச் சுரண்டல் என்பன தொடரும் பட்சத்தில் அங்கு மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் எனவே இத்தகைய முறையற்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தும்படி ஐ.நா அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் எட்வேர்ட் ரீஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் விசேட பிரதிநிதி சனா ரஸ்ஸலா ஆகியோருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று 28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதை இலக்காகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மோதல் தடுப்புச் செயற்திட்டம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான செயற்திட்டங்கள் முன்னர் எவ்வாறு முன்னெடுக்கப் பட்டன? இனி வருங் காலங்களில் அவற்றை எவ்வாறு முன்னெடுக்கலாம்? என்பது குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது இலங்கையில் உருவாகக் கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் இருவிதமான மோதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்த எம்.ஏ.சுமந்திரன், அவற்றை உரியவாறு கையாள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

முதலாவதாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்றுவரும் காணி அபகரிப்பு, மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அழிக்கப்படல் என்பன பற்றி ஐ.நா அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டிய சுமந்திரன், இவை தொடரும் பட்சத்தில் அங்கு மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியப்பாடு காணப் படுவதாகத் தெரிவித்தார்.

எனவே இதுகுறித்து ஐ.நா அதிகாரிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும், மேற்குறிப்பிட்டவாறான முறையற்ற செயற்பாடுகளை நிறுத்துமாறு வலியுறுத்த வேண்டும் என்றும் சுமந்திரன் கேட்டுக் கொண்டார்.

இரண்டாவதாக நாடளாவிய ரீதியில் உருவாகக்கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் மோதல் குறித்துப் பிரஸ்தாபித்த அவர், அரகலய' உள்ளடங்கலாகக் கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் மேற் கொள்ளப்பட்ட போராட்டங்கள் ஊடாக எதிர்பார்க்கப் பட்ட பெறுபேறுகள் இன்னமும் அடையப்படாமை இதற்குக் காரணமாக அமையக் கூடும் என்று சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் அதனூடாகப் பல்வேறு நன்மைகள் அடையப்பட்டுள்ள நிலையில், மக்கள் எதிர்பார்க்கும் உண்மையான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவசியமான அழுத்தத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும் என்றும் எம்.ஏ.சுமந்திரன் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 ஒக்டோபர் 2023 சனிக்கிழமை

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
# 30வது ஆண்டு விழா சங்கீத சங்கமம் 2023



கடந்த 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக் கிழமை ஸ்காபரோவில் அமைந்துள்ள Chinese Cultural Centre இல் தமிழ் ஈழத்தின் இசைவேந்தன் வர்ண. ராமேஸ்வரன் நினைவரங்கத்தில் நடைபெற்ற உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா ஈழநாடு பத்திரிகையின் வாசகர்களாலும் கலா ரசிகர்களாலும் அரங்கம் நிரம்பிய விழாவாக இனிதே நடைபெற்றது.

விழா சரியாக 6.10 நிமிடத்துக்கு விழா அறிவிப்பாளர் திரு ஞானபண்டிதரின் சுந்தரத் தமிழோடு - திருமதி யசோதரா பரமேஸ்வரன், திருமதி சகி சங்கர், திருமதி சாருமதி மனோகாந்தன் திருமதி கவிதா தேவதாஸ் திருமதி கலாரஞ்சினி கிருஷ்ணகோபால் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி விழாவினை மங்களகரமாக ஆரம்பித்து வைத்தனர்.



அதனைத் தொடர்ந்து செல்வி பூஷா தேவதாஸ் அவர்களால் தேவாரம் பாடப் பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம் என்பவற்றை செல்வி பூஷா தேவதாஸ், செல்வி கருணி லோகன் செல்வி அபர்ணா கேதா ஆகியோர் இசைத்தனர். தமிழ்ஈழத் தேசிய கீதத்தினை திரு சோம. சச்சிதானந்தன் அவர்கள் வழங்கினார்கள்.

தொடர்ந்து தமிழீழத்தின் இசை வேந்தன், தேசியப் பாடகர் வர்ண. ராமேஸ்வரன் அவர்களுக்கான ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது. சுடரினை இசைவேந்தனது மாமா மாமியுடன் அவரது பிள்ளைகளும் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து திருமதி தாட்சாயினி பிறின்ஸ் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.



கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக தாயகத்திலும் புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழ்ந்த போதும் இன்று கனடிய மண்ணில் வாழ்ந்து வருகின்ற போதிலும் தனது தள்ளாத வயதிலும் தமிழ்ப்பணியும் அரசியல் பணியும் செய்து வருகின்ற தமிழேந்தல் ஈழவேந்தன் அவர்கள்

கனடிய மண்ணின் மூத்த தமிழ் பிரஜைகளில் ஒருவரும் கனடாத் தமிழர்களின் தலைவர் என்று போற்றப்பட்ட அமரர் திரு நாகலிங்கம் சிவலிங்கம் அவர்களது துணைவியாரும் சமூகசேவையாளருமான திருமதி ஜெனனி சிவலிங்கம் அவர்கள்

கனடிய மண்ணில் Times Iron Works தொழில் நிறுவனத்தின் அதிபரும் தாயக மண்ணில் தமது சொந்தப் பணத்தில் நலிவுற்றோருக்கு பல்வேறு பணிகளைச் செய்து வருவதுடன் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 62 மாணவர்களது கல்விக்காக தொடர்ந்து உதவி வருபவருமான திரு தேவதாஸ் சண்முகலிங்கம்

கனடிய மண்ணில் தங்க நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் நியூரங்கனாஸ் தங்கச் சுரங்கத்தின் அதிபரும் தாயக மண்ணில் குறிப்பாக தமிழர்களது எல்லைக் கிராமங்களில் ரங்கன் நற்பணி மன்றம் என்ற தனது சொந்த



அமைப்பின் மூலம் தேசப்பணியும் தெய்வத் திருப்பணியும் செய்து வரும் திரு ரங்கன் பத்மநாதன் ஆகியோர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

இவர்களில் திரு ஈழவேந்தன் அவர்களுக்கான விருதினை கனடாவின் மூத்த தமிழ் குடிமகனும் சமூகசேவையாளருமான திரு அருள் எஸ்.அருளையா அவர்கள் வழங்கினார். ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்.

திருமதி ஜெனனி சிவலிங்கம் அவர்களுக்கான விருதினை கனாாவின் மூத்த தமிழ் சட்த்தரணி யசோ சின்னத்துரை அவர்கள் வழங்கினார். ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்.

திரு தேவதாஸ் சண்முகலிங்கம் அவர்களை கனடாவின் பிரபல தொழில் நிறுவனமான CSI - Founder & CEO of அதிபருமான திரு ஸ்ரான் முத்துலிங்கம் அவர்கள் விருதினை வழங்கினார். ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்.

திரு ரங்கன் பத்மநாதன் அவர்களை கனடாவின் சிறந்த சிறுகதை எழுத்தாளரும் திரைப்படத் தயாரிப்பாளரும் சமூக சேவையாளருமான திரு மார்க்கண்டு தனபாலன் (தனபாலன் மாஸ்டர்) அவர்கள் வழங்கினார். ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக இன்று உலகம் முழுவதும் பேசப்படும் Prisoner 1056 நூலின் ஆசிரியரும் சிறந்த தமிழ் இன உணர்வாளருமான திரு றோய் இரத்தினவேல் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் தனதுரையில் தமிழ் இனம் தரணியில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். எமது இளைய தலைமுறை தங்களது



இனத்தின் அடையாளங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற தொனிப் பொருளில் பொருள் பொதிந்த உரையாற்றினார்.


அதனைத் தொடர்ந்து இசைச்சங்கமம் 2023 நிகழ்வின் முக்கிய நிகழ்வாக வீணை இசை வேந்தன் கலைமாமணி ராஜேஸ் வைத்தியா அவர்களை M.R. Beauty நிறுவனத்தின் அதிபர் திருமதி



ரதி மயூரன் அவர்களது ஒழுங்கமைப்பில் செல்விகள் அஞ்சலை ரமேஷ் துவாரகா பாஸ்கரன் பிரியங்கா அன்ரன் Ganavi ரகுராஜன் ஆகியோர் மங்கள விளக்கினை ஏந்தி அரங்கத்திற்குள் அழைத்து வந்தனர். அரங்கில் இருந்த கலா ரசிகர்கள் அரங்கு அதிர கரவொலி எழுப்பி அவரை வரவேற்றனர்.

அரங்கத்தில் ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அதனைத் தொடர்ந்து வீணை இசை வேந்தன் கலைமாமணி ராஜேஸ் வைத்தியா அவர்களின் இசைச் சங்கமம் சுமார் இரண்டரை மணி நேரம் பொழிந்து தள்ளியது.

இசை நிகழ்ச்சிக்கு பக்க வாத்தியக் கலைஞர்களான திரு மோனகராமன் (மிருதங்கம்) திரு ஆனந் (கிற்றார்) ஹரிராம் (கடம்) செல்வன் யாதவன் (தபேலா) திரு சுபோசன் (கீபோர்ட்) திரு பிரவின் (ரம்ஸ்) ஒலி ஒளி அமைப்பாளர் திரு யது ஆகியோர் சிறப்பாக



தமது பங்களிப்பினை வழங்கினார்கள்.

எங்கேயும் எப்போதும் சங்கீதம் சந்தோஷம் என்ற பாடலுடன் இசைச் சங்கமம் இனிதே 11.00 மணிக்கு நிறைவேறியது.

அரங்கை விட்டு அகல மனமின்றி அடுத்த ஒரு நிகழ்வில் சந்திப்போம் என்று கூறியவாறு கலா ரசிகர்கள் அரங்கை விட்டு வெளியேறினர். விழாவுக்கு வருகை தந்த அனைவருக்கும் ஈழநாடு ஆசிரியர் நன்றி தெரிவித்தார்.

(விழா தொடர்பான புகைப்படங்கள் 12,13ம் பக்கத்தில் உள்ளது) போட்டோ ஐயா 4 யூ செய்தி குணா,



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர் களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத் தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவு களால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வரு கின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின் றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்ற டைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 ஏப்ரல் 2023 முதல் 05 மே 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு மருதப்பு தயாளன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூக சேவையாளரும் தமிழின உணர்வாளருமான திரு மருதப்பு தயாளன் அவர்களின் 13வது ஆண்டு நினைவு நாள் 04 மே 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அவரது சகோதரர் திரு தயாகுணன் அவர்கள் அவரது நினை வாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார். திரு மருதப்பு தயாளன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### கந்தையா ஜெயரட்ணம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா ஜெயரட்ணம் அவர்களின் 11வது ஆண்டு நினைவு நாள் 03 மே 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கந்தையா ஜெயரட்ணம் அவர்களது ஆத்மா சாந்தியடை யப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார் கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோன்மணி பாலசுந்தரம்

கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 03 மே 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தி னருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்தம்பி தவராஜா

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 மே 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்குகவுள்ளார்கள். திரு சின்னத்தம்பி தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 15வது ஆண்டு நினைவஞ்சலி



### சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிரு ந்த முன்னாள் யாழ்மாநகரசபை முதல்வர் சட்டத்தரணி சின்னத்தம்பி நாகராஜா அவர்களது 15வது ஆண்டு நினைவு நாள் 08 மே 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். திரு சின்னத்தம்பி நாகராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர் களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 83வது பிறந்தநாள் நினைவாக

### செல்வி ருக்மணிதேவி முத்தையா




யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த அமரத்துவச் செல்வி ருக்மணி தேவி முத்தையா அவர்களது 83வது பிறந்த நன் நாள் 30 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அவரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளு க்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் அமரத்துவச் செல்வி ருக்மணி தேவி முத்தையாவின் 83வது பிறந்த நாளில் அவரது பெயரால் உணவு வழங்குவதையிட்டு அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் அவரது குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் சாம்பசிவம் அவர்களது 40வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 ஏப்ரல் 2023 சனிக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நமசிவாயம் திருநாவுக்கரசு அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 ஏப்ரல் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஜெயச்சந்திரன் ஜெயஸ்ரீ இணையர்களின் செல்வப்புதல்வன் அர்யுனின் மூன்றாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அர்யுன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




30 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த அமரத்துவச்செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 83வது பிறந்த நாள் ஆகும். பிறந்த நாள் நினைவாக அவரது உறவுகள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 மே 2023 புதன்கிழமை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா ஜெயரட்ணம் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 மே 2023 புதன்கிழமை கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 மே 2023 வியாழக்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மருதப்பு தயாளன் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது சகோதரன் தயாகுணன் மருதப்பு (கிளி) அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 மே 2023 வியாழக்கிழமை செல்வி பேபி இரத்தினேஸ்வரன் (கனடா) அவர்களது 28வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 மே 2023 வெள்ளிக்கிழமை சித்திராபௌர்ணமி உபயமாக கனடாவில் வசிக்கும் புதுச்செம்மணி வீதி கல்வியங்காட்டைச் சேர்ந்த திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பம் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



05 மே 2023 வெள்ளிக்கிழமை சித்திராபௌர்ணமி உபயமாக ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
# 30வது ஆண்டு விழா சங்கீத சங்கமம் 2023











## ஈழநாடு 30வது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட
## அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்!

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
# 30வது ஆண்டு விழா சங்கீத சங்கமம் 2023










# PREMIER DIAGNOSTIC NETWORK

DXN

**647·660·0699**
www.pdxn.ca

Scan for Online Booking

## RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

## ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

## FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

# கண்ணாடியில் நிலவைக் காட்டும் அரசியல்!

சில மாதங்களுக்கு முன் கனடாவுக்கு போக வெளிக்கிட்டு சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 303 தமிழ்க் குடியேறிகளைக் குறித்துக் கேள்விப்பட்டோம். அவர்கள் வியட்நாமில் உள்ள இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களிற் பெரும்பாலானவர்கள் பொருளாதார காரணங்களுக்காக சட்டவிரோதமாகப் புலம் பெயர்ந்தவர்கள் என்று ஐநாவும் உலக பொது நிறுவனங்களும் நம்புவதாகத் தெரிகிறது. இந்த அடிப்படையில் அவர்களை ஐநாவின் அகதிகளுக்கு பொறுப்பான அமைப்பு பொறுப்பேற்கத் தயாரில்லை என்றும் தெரிகிறது.

இதனால் அப் புலம்பெயரிகளில் ஒரு தொகுதி நாடு திரும்பி விட்டது. ஏனைய தொகுதி படிப்படியாக நாடு திரும்பி வருகிறது. இவர்கள் யாரும் விருப்பத்தோடு நாடு திரும்பவில்லை.

ஏனென்றால் அவர்கள் நாட்டை விட்டுப் போக வேண்டும் என்ற விருப்பத்தோடு தான் ஆபத்தான கடல் வழியில் இறங்கினார்கள். எனவே அவர்கள் நாட்டுக்கு விருப்பத்தோடு திரும்பி வருகிறார்கள் என்று யாரும் கூற முடியாது. அவர்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு வர விரும்பாது ஐநாவிடம் அகதி அந்தஸ்து கோரி மேல்முறையீடு செய்தார்கள். ஆனால் அந்த மேல் முறையீடுகள் முதல் தடவை நிராகரிக்கப்பட்டன.

அதில் ஒரு தொகுதியினர் மீண்டும் விண்ணப்பித்தார்கள். அதுவும் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் இந்த வாரம் நாடு திரும்புகிறார்கள். இந்நிலையில், வியட்நாமில் மிஞ்சியுள்ள தமிழ்ப் புலம்பெயரிகளையும் நாட்டுக்குத் திரும்பி அனுப்பும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதில் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், நாடு திரும்ப விரும்பாத புலம்பெயரிகள் ஐநாவுக்கு கொடுத்த மேல்முறையீட்டு விண்ணப்பங்களில் நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் உட்பட சில பிரமுகர்களின் பரிந்துரைகள் அடங்கிய கடிதங்களையும் இணைத்துக் கொடுத்ததாகத் தெரிகிறது.

அதாவது அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் கூறும் காரணங்களை மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதிப்படுத்திக் கடிதம் கொடுத்திருந்தார்கள். ஆனால் ஐநாவோ அல்லது இதில் சம்பந்தப்பட்ட ஏனைய உலகப் பொது நிறுவனங்களோ அந்த கடிதங்களை பொருட்படுத்தவேயில்லை. அப்புலம்பெயரிகள் அனைவரையும் சட்டவிரோத குடியேறிகள் என்று ஐநா பார்க்கின்றது. அவர்கள் பொருளாதார காரணங்களுக்காக ஏஜென்ட்களுக்கு காசு கொடுத்து புலம்பெயர முற்பட்டவர்கள் என்று ஐநா கருதுகிறது. அதனால் அவர்களைத் திரும்பி அனுப்பும் நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படுகின்றன .

அதாவது ஐநா போன்ற உலகப் பொது அமைப்புக்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு உள்ள மதிப்பை இது காட்டுகிறது எனலாமா? அல்லது புலம்பெயரிகளின் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் பின்னால் உள்ள அரசியலை ஐநா ஏற்றுக் கொள்ளவில்லையா? அது தான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள மதிப்பு என்றால், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி ஐநா உட்பட ஏனைய உலகப் பொதுமன்றங்களிடம் தமிழ் மக்களுக்கான நீதிக்காகப் போராடப் போகிறார்கள்?



இதில், ஒரு விளக்கம் கூறப்படலாம். அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களுக்கு அங்கீகாரம் இல்லை. அதனால் அத்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை உலகப் பொது மன்றங்கள் அவ்வாறு தான் கையாளும் என்று. அப்படியென்றால் இந்த விளக்கத்தை ஒரு கதைக்காக ஏற்றுக் கொண்டால் அந்த அங்கீகாரத்தை பெறுவதற்காக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 13 ஆண்டுகளில் என்ன செய்திருக்கிறார்கள்? உள்நாட்டில் சிங்கள பௌத்த மயமாக்களுக்கு எதிராகவும் நிலப்பறிப்புக்கு எதிராகவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்காங்கே போராடி வருகிறார்கள். அதிலும் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாகத் தான் போராடப் பார்க்கின்றது கூட்டாக சேர்ந்து போராட கட்சிகள் தயார் இல்லை.

அதாவது கட்சிகளின் போராட்டந் தான். தேசத்தின் போராட்டம் அல்ல. அது போலவே அன்னை பூபதி நினைவு தினம் திலீபன் நினைவு தினம் போன்றவற்றிலும் கட்சிகள் எப்படி திலீபனையும் அன்னை பூபதியையும் தத்தெடுக்கலாம் என்று தான் சிந்திக்கின்றனவே தவிர, அதை ஒரு தேசிய அளவிலான நினைவு கூர்தலாகவோ, அல்லது மக்கள் மயப்பட்ட நினைவு கூர்தலாகவோ ஒழுங்கமைப்பதற்கு தயார் இல்லை.

அதாவது தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் ஆகப் பெரிய திரட்சியாக திரட்டிக் காட்டினால் தான் உலக சமூகம் திரும்பிப் பார்க்கும். உதிரி உதிரியாகப் போராடி உலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்க முடியாது. சிவாஜிலிங்கத்தின் வீர தீரச் செயல்கள் அடுத்த நாள் பத்திரிகையில் செய்தியாக வரலாம். ஆனால் அது ஐநாவையோ அல்லது உலக நாடுகளின் தலைநகரங்களில் உள்ள முடிவெடுக்கும் அதிகாரத்தை பெற்ற கொள்கை வகுப்பாளர்களையோ தீண்டப் போவதில்லை.

தமிழ் மக்களுக்கு உலக சமூகத்தில் எத்தனை நாடுகள் நட்பாக உள்ளன? எத்தனை உலகப் பொது மன்றங்கள் தமிழ் மக்களின் பக்கம் நிற்கின்றன? கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் உலக அரங்கில் எத்தனை புதிய நண்பர்களை பெற்றிருக்கிறார்கள்? இந்த கேள்விக்கு தமிழ்கட்சிகள் பதில் கூறுமா? உள்ளூரில் தங்களுடைய அரசியல் எதிரிகளை நண்பர்களாக வென்றெடுக்க முடியாத இந்த கட்சிகள் வெளிச் சமூகத்தை எப்படி வென்றெடுக்க போகின்றன?

இது தொடர்பாக தமிழ் கட்சிகளிடம் ஒரு பொருத்தமான வழி வரைபடம் உண்டா? இல்லை. இங்கு ஒரு முக்கிய உதாரணத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னாரைச் சேர்ந்த தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இடம் பெற்ற மூன்று சந்திப்புகளின் முடிவில் ஒரு கூட்டுக் கடிதம் ஜனவரி 21ஆம் தேதி அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்தில் தமிழ் கட்சிகள் இரண்டு பிரதான கோரிக்கைகளை முன் வைத்தன.

முதலாவது கோரிக்கை, பொறுப்பு கூறலை ஐநா மனித உரிமைகள் பேரவையிலிருந்து எடுத்து ஐநா பொதுச் சபையிடம் கொடுத்து அதன் மூலம் உலக பொது நீதிமன்றங்களிடம் கையளிக்க வேண்டும் என்பதாகும்.

இரண்டாவது கோரிக்கை, சான்றுகளையும் சாட்சிகளையும் திரட்டுவதற்குரிய ஒரு பொறி முறையை உருவாக்க வேண்டும். அதற்கு குறிப்பிட்ட காலவரையறையும் அறிவிக்கப்பட வேண்டும்.



இந்த இரண்டு கோரிக்கைகளையும் அதிகம் வலியுறுத்தியது தமிழ் தேசிய மக்கள் முன்னணி தான். தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பொழுது இவ்வாறான கூர்மையான கோரிக்கைகளை முன் வைப்பது அக்கட்சி தான். ஆனால் அந்த கடிதம் அனுப்பப்பட்ட பின் என்ன நடந்தது? கடிதம் அனுப்பி கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது.

இதில் ஒரு விடயம் மட்டும் ஒப்பேறி இருக்கிறது. அதுவும் கூட அரை குறை தான். அது என்னவெனில் சான்றுகளையும் சாட்சிகளையும் தொகுப்பதற்கான ஒரு அலுவலகம். ஆனால் அடுத்த விடயம், அது தான் முக்கியமானது.

பொறுப்புக் கூறலை ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. மட்டுமல்ல முன் சொன்ன சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகமும் ஐநா மனித


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

உரிமைகள் பேரவையின் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கிறது.

அதாவது தொகுத்துப் பார்த்தால் பொறுப்பு கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. இந்த விடயத்தில் கடிதத்தில் கையெழுத்துப் போட்ட மூன்று கட்சிகளும் கடந்த 27 மாதங்களாக என்ன செய்து கொண்டிருக்கின்றன? குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த விடயத்தில் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது? பொறுப்புக் கூறலை ஐநாவுக்கு வெளியே கொண்டு போவது என்பது ஒரு கோரிக்கை மட்டும் அல்ல. அது ஒரு வெளியுறவு நடவடிக்கை. அதற்காக உலக நாடுகளின் தலைநகரங்களில் லோபி செய்ய வேண்டும். அந்த கட்சியிடம் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான் உண்டு. அது ஒரு அடிப்படைப்பலவீனம். தமது மக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் பலவீனமான பிரதிநிதித்துவத்தை கொண்டிருக்கும் ஒரு கட்சி.

உலக அரங்கில் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு அங்கீகாரத்தையே கொண்டிருக்கும். இக்கட்டுரையின் தொடக்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டது போல, கனடாவுக்குப் போக எத்தனித்த தமிழ் குடியேறிகளின் விடயத்தில் தமிழ் கட்சிகளின் கடிதத்துக்கு எப்படிப்பட்ட மரியாதை இருந்தது என்று பார்த்தோம்.

அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உள் நாட்டில் மட்டுமல்ல வெளி உலகத்திலும் மதிப்பு இல்லை. இந்நிலையில் அந்த மதிப்பை எப்படி பெருக்கிக் கொள்வது? அந்த அங்கீகாரத்தை எப்படி பெறுவது? என்று சிந்தித்து அதற்காக உழைப்பதற்கு தமிழ் கட்சிகள் தயாரா? அவ்வாறு உழைக்க தயாரில்லை என்றால், குழந்தைக்கு சாப்பாடு கொடுக்கும் போது கண்ணாடியில் நிலவை காட்டும் அரசியலைச் செய்யக்கூடாது. அல்லது அந்த அரசியல் ஒரு வாக்கு வேட்டை அரசியல் தான் என்பதனை வெளிப்படையாகச் சொல்லும் துணிச்சலும் நேர்மையும் இருக்க வேண்டும்.

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN



$93

weekly - Plus TAX

$0 down @ 6.58%

CANADIAN BUILT

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

**2023 CIVIC LX Model**




## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

**2023 CR-V HYBRID Available**

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



tonymidtown@hotmail.com

**Tony Siva**
Sales & Leasing Executive

**647.269.0749**

# கடையடைப்புத் தேவையா?

கடந்த 28 ஏப்ரல் 2023 வெள்ளிக் கிழமை. வெடுக்குநாறி மலையில் பூசைகள் நடக்கத் தொடங்கியுள்ளன. வியாழக்கிழமை கச்சத்தீவிலிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கடையடைப்பு. அதற்கு அழைப்பு விடுத்த கட்சிகளைப் பொறுத்தவரை வெற்றி தான். எனினும் கடந்த வியாழக் கிழமை. யாழ்ப்பாணம். தையிட்டியில் தனியார் காணியில் இராணுவம் கட்டிய பெரிய விகாரையில் பூசை நடந்திருக்கிறது என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஒரு நாள் கடையடைப்பு தொடர்பாக மூன்று விதமான விமர்சனங்கள் உண்டு. முதலாவது அதனால் எந்தப் பயனும் இல்லை. அது கொழும்புக்கு நோகாத ஒரு போராட்டம் என்பது. இரண்டாவது அது அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றிலடிப்பது என்பது. மூன்றாவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறும் விமர்சனங்கள். இவை மூன்றையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவதாக இது போன்ற போராட்டங்களால் பயன் இல்லை என்பது. இந்த ஒரு நாள் போராட்டம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாதுஎன்பது உண்மை. தமிழ் மக்கள் இதை விடப் பெரிய போராட்டத்தை நடாத்திய மக்கள். இதுபோன்ற ஒருநாள் கடையடைப்புக்கள் கொழும்பின் கவனத்தையோ உலகத்தின் கவனத்தையோ தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருக்கப் போதுமானவை அல்ல.

எனினும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் போராட வேண்டியிருக்கிறது. வடக்கு கிழக்கு இணைந்து ஒப்பீட்டளவில் ஒரு பெரிய திரளாக தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றையும் செய்யாமலிருந்து வெறுவாய் சப்புவதை விட இது பரவாயில்லை.

அதேசமயம் கடந்த ஆண்டு தென்னிலங்கையில் தோன்றிய தன்னெழுச்சிப் போராட்டங்களோடு ஒப்பிடுகையில்



இதுபோன்ற கடையடைப்புகள் படைப்புத்திறன் குறைந்தவை. யாந்திரீகமானவை.இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கையிடமிருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை. சமூக வலைத்தளங்களில் சிலர் விமர்சிப்பதைப் போன்று இது அரசியல்வாதிகளின் இயலாமையைக் காட்டுகிறது.

ஒரு புதிய மக்கள் போராட்ட வடிவத்தைக் குறித்துச் சரியான விளக்கமோ. விசுவாசமான தேடலோ. தீர்க்கதரிசனம் மிக்க வழிவரைபடங்களோ இல்லாத வெற்றிடத்தில்தான் இது போன்ற யாந்திரீகமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே கடையடைப்பு ஒரு விதத்தில் தமிழ் அரசியலின் இயலாமையை காட்டுகிறது என்றும் சொல்லலாம்.

இரண்டாவது இப்போராட்டத்தால் அன்றாடங் காய்ச்சிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பது. அது உண்மை. அரசியல்வாதிகள் அனேகமாக அன்றாடங் காய்ச்சிகள் இல்லை.அ ன்றன்று உழைப்பவர்கள் இது போன்ற போராட்டங்களால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தன் அரசியல் இலக்குகளை அடைவதற்காகச் செய்யக்கூடிய தியாகங்களுக்குள் அந்த ஒரு நாள் உழைப்பும் அடங்



கும். தமிழ் மக்கள் இதை விடப் பெரிய தியாகங்களைச் செய்த மக்கள். ஒரு நாள் உழைப்பைக் காட்டி இது போன்ற போராட்டங்களை கொச்சைப் படுத்த முடியாது.

மூன்றாவது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வைக்கும் விமர்சனங்கள். அவை வழமையான வாய்ப்பாட்டு விமர்சனங்கள் தான். போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகளுக்கும் அதற்குத் தகுதி இல்லை. அவர்கள் விசுவாசமாகப் போராடவில்லை என்ற பொருள்பட முன்னணி குற்றம் சாட்டியிருக்கிறது.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் தமிழ்மக்கள் போராட வேண்டும்.அது அரசுக்கு எதிரான போராட்டம். அப் போராட்டத்தை எதிர்ப்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக யாருக்குச் சேவகஞ் செய்யும்?. அந்த ஏழு கட்சிகளுக்கும் போராடும் தகமை இல்லையென்றால் அல்லது அவை விசுவாசமாகப் போராடவில்லையென்றால். விசுவாசமான ஒரு போராட்டத்தை துணிச்சலான ஒரு போராட்டத்தை ஏன் முன்னணி ஒழுங்கு செய்யக் கூடாது?

முன்னணி தன்னை ஏனைய கட்சிகளை விடத் தூய கட்சியாகவும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அதிகம் விசுவாசமான கட்சியாகவும் காட்டிக் கொள்கிறது. அதை விட முக்கியமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசாகவும் அது தன்னைக் காட்டிக்கொள்கிறது.

அந்த அடிப்படையில் அந்த இயக்கத்தின் நினைவு நாட்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அன்னை பூபதியின் நினைவு மண்டபத்திலும் முன்னணிக்கும் கிழக்கைச் சேர்ந்த சிவில் அமைப்புகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அது ஓர் அருவருப்பான முரண்பாடு.அன்னை பூபதியை நினைவு கூர்வதற்கென்று ஒரு பொதுக் கட்டமைப்பு அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்களும் மதத் தலைவர்களும் அன்னையின் குடும்பத்தவர்களும் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் முன்னணி அப் பொதுக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. இது திலீபனின் நினைவுத் தூபிக்கு முன் ஏற்பட்ட முரண்பாட்டை நினைவுபடுத்துகின்றது. புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கு தனக்குத் தான் அதிகம் உரித்தும் தகுதியும் உண்டு என்று முன்னணி கருதுகின்றது. அதன் மூலம் புலிகள் இயக்கத்தின் விசுவாசமான தொடர்ச்சியாகவும் அக்கட்சி தன்னை காட்டிக் கொள்ள விளைகின்றது. ஆனால் அதை அவர்கள் தமது செயற்பாட்டில் நிரூபிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியலைத் தொடர்வது என்பது. அதுவும் மிதவாத அரசியலில் அதைத் தொடர்வது என்பது சாராம்சத்தில் அந்த இயக்கத்தைப் போல அர்ப்பணிப்புகளுக்கு தயாராக இருப்பது தான். ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக முன்னணி அப்படிப்பட்ட தியாகங்களைச் செய்திருக்கின்றதா?

பொலிசாரோடும் படைகளோடும் நெத்திக்கு நேரே மோதுவதும். துணிச்சலாகக் கதைப்பதும். தள்ளு முள்ளுப்படுவதும். சில மணித்தியாலங்கள் சிறையில் இருப்பதும். சாகசச் செயல்களே. அவற்றைத் தியாகம் என்று கூற முடியாது. தமிழ் மக்கள் கடந்து வந்த செயற்கரிய தியாகங்களோடு ஒப்பிடுகையில் இவையெல்லாம் தியாகங்களா? திலீபனையும் பூபதியையும் படங்களாக வாகனங்களில் காவித் திரிவது மட்டும் போதாது. அதைவிட ஆழமாக திலீபனைப்போல பூபதியைப் போல உண்ணாவிரதம் இருப்பதற்கு எத்தனை பேர் தயார்?

கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகள் மட்டுமல்ல. கடையடைப்பைப் பரிகசித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடந்த 13 ஆண்டுகளாக கொழும்பின் கவனத்தையும் உலகத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் போராடத் தவறியிருக்கிறது. அரசியலில் மற்றவர்களை விமர்சிப்பதால் ஒரு கட்சி தூய்மையானது ஆகிவிடாது. மாறாக மற்றவர்கள் செய்யத் தவறியதைத் தான் செய்ய வேண்டும். மற்றவர்களைத் துரோகிகளாக்குவதால் ஒருவர் தியாகி விட முடியாது மாறாக தான் செய்யும் தியாகங்களால் தான் ஒருவர் தியாகியாக முடியும்.

தமது மக்கள் மத்தியில் மட்டுமல்ல. அனைத்துலக அரங்கிலும் தமிழ் அரசியலின் அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் தமிழ்க்கட்சிகள் உழைத்திருக்கின்றனவா? கடந்த 13ஆண்டுகளில் தமிழ்க்கட்சிகள் அனைத்துலக அளவில் சம்பாதித்த புதிய நட்புகள் எத்தனை? உள்ளூரில் சக தமிழ்க் கட்சிகளோடு தந்திரோபாயக் கூட்டுக்களைக் கூட வைத்துக் கொள்ளமுடியாத கட்சிகள். எப்படி வெளியரங்கில் உலக சமூகத்தோடு கூட்டுக்களை வைத்துக் கொள்வது?

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் அந்தஸ்தை மதிப்பிடுவதற்கு ஆகப்பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டலாம்.சில மாதங்களுக்கு முன் கனடாவுக்கு வெளிக்கிட்ட 303 தமிழர்கள் சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது காப்பாற்றப்பட்டு வியட்நாமில் இடைத்தங்கல் முகாமில் வைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒரு தொகுதியினர் நாடு திரும்பி விட்டார்கள். அவர்கள் விருப்பத்தோடு நாடு திரும்பவில்லை. இந்த நாட்டில் இருக்கப் பிடிக்காமல் தான் புலம்பெயர முயற்சித்தார்கள். அவ்வாறு திரும்ப விரும்பாதவர்கள் ஐநாவுக்கு மீண்டும் மீண்டும் மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மேன்முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

அவ்வாறு மேன்முறையீடு செய்த சிலர் நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் சிலருடைய பரிந்துரைக் கடிதங்களையும் சமர்ப்பித்ததாக அறிய முடிகிறது. ஆனால் வியட்நாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழ் புலம்பெயரிகளை. ஐநா.ஐ.ஓ.எம் போன்றன சட்டவிரோதக் குடியேறிகளாகத் தான் பார்க்கின்றன. அவர்களை அரசியற் காரணங்களுக்காக குடி பெயரை முற்பட்டவர்கள் என்று பார்க்கவில்லை என்று தெரிகிறது. அதனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய கடிதங்களை மேற்சொன்ன அனைத்துலக நிறுவனங்கள் பொருட்படுத்தவில்லை. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் படிப்படியாக நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

புலம்பெயரிகளின் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளை உலகப்பொது அமைப்புக்கள் பொருட்படுத்தவில்லை என்று தெரிகிறது. அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு உலகப் பொது அமைப்புகள் கொடுக்கும் மரியாதை அவ்வளவு தான். அப்படியென்றால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஐநா போன்ற கட்டமைப்புகளின் மீதும் உலகின் வெளியுறவு கட்டமைப்புகளின் மீதும் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்த முடியும்?

இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளிடம் ஏதாவது வழிவரைபடங்கள் உண்டா? அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டு தமிழர்களை அரவணைக்க வேண்டிய தேவை உலகில் எந்த ஒரு அரசுக்காவது உண்டா? அரசுகள் எது பலமோ.எது தேவையோ அதைத்தான் நாடிவரும். எங்கே நீதி இருக்கிறது என்று பார்த்து நாடி வருவதற்கு பூமியொன்றும் தேவ ராஜ்ஜியம் அல்ல.தமிழ் மக்கள் தமது பேரபலத்தை அதிகப்படுத்த வேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியை பெரும்பாலான தூதரகங்களும் ஐநாவும் ஆர்வத்தோடு கவனித்தன. ஏன் தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சி போராட்டங்களையும் வெளிநாட்டு தூதரகங்கள் ஆர்வத்தோடு கவனித்தன. ஆர்வத்தோடு கையாண்டன என்று கூடச் சொல்லலாம். தமிழ் மக்களுக்கான நீதியைப் பெறப் போவதாக கூறிக் கொள்ளும் கட்சிகள் முதலில் (22ம் பக்கம் பார்க்க)

கடந்த வருடத்தின் மூன்று தொடர்ச்சியான 9ம் திகதிகள் அரசியலில் எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது இலகுவாக மறந்து விடக்கூடியதன்று.

கடந்த மே மாதம் 9ம் திகதி மகிந்த ராஜபக்ச தமது பிரதமர் பதவியை துறந்தார். நிதி அமைச்சராகவிருந்த பசில் ராஜபக்ச ஜீன் 9ம் திகதி பதவி துறந்தார். இறுதியாக ஜீலை 9ம் திகதி கோதபாய ராஜபக்ச தமது பதவியைத் துறப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக நாட்டை விட்டு தப்பியோடினார்.

அதிகார வம்ச பலத்தோடு ஆட்சியிலிருந்த மூன்று சகோதரர்களுக்கு இப்படியொரு முடிவு வருமென எவரும் எண்ணியிருக்கவில்லை. இந்த எதிர்பாராத நிகழ்வுகளை மையப்படுத்தி ராஜபக்சக்களின் ஆட்சியில் பதவி சுகபோகங்களை அனுபவித்த விமல் வீரவன்ச வெளியிட்ட ஒரு புத்தகம் கடந்த சில நாட்களாக அரசியல் அரங்கத்தில் விவாதிக்கப்படுகிறது.

இந்த சிங்கள புத்தகத்தின் பெயர் நமய – செங்கவுணு கதாவ (ஒன்பது – மறைக்கப்பட்ட கதை). இப்புத்தகம் வெளியான சில மணித்தியாலங்களிலேயே இதில் குறிப்பிடப்பட்ட தெரிந்ததும் தெரியாததுமான விடயங்கள் உண்மையோ பொய்யோ என அறிய முன்னரே உயர் மட்டங்களில் சந்தேகத்தையும் சந்தோசத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்றைய ஜனாதிபதி கோதபயவையும் அவருக்கு நம்பிக்கையான பாதுகாப்பு அதிகாரிகளையும் கொலை செய்ய திட்டமிடப்பட்டிருந்தது எனவும், கோதபாய பதவி விலகும் போது ரணிலும் பதவி நீக்கப்பட வேண்டுமென அமெரிக்காவும் இந்தியாவும் விரும்பியிருந்

யிருந்தார். ஆனால், அதனைத் தெரிந்து கொண்டு அதற்கு முன்னராக விமல் வீரவன்ச தமது பதவியை துறந்ததோடு பொதுஜன பெரமுனவின் கூட்டிலிருந்தும் விலகிக் கொண்டார். இதன் பின்னர் அரகலய போராட்டத்தில் இவர் மறைகரமாக இருந்ததும் பொதுவெளியில் அறியப்பட்டது.

கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் ராஜபக்சக்களுக்கு எதிரான சில உதிரிகளுடன் சேர்ந்து புதிய கூட்டணி ஒன்றை இவர் உருவாக்கினார். இவர் முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராகி ஜனாதிபதியானது. இவர் எழுதியுள்ள நூலின் உண்மைத்துவத்தை அறிய மேலே குறிப்பிடப் பட்ட பின்னணி அவசியமாகும்.

கடந்த வருட யூலை மாத முதல் வாரத்தில் கோதபாயவை ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்து கொலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது அப்போதே வெளியான முக்கிய தகவல். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண, முப்படைகளின் பிரதம தளபதி சவேந்திர சில்வா உட்பட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் இதனைத் தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காது கொலை முயற்சித் திட்டத்துக்கு சாதகமாக இருந்ததாகவும் அப்போதே தகவல்கள் வெளியாகியிருந்தன. மகிந்தவை பதவி துறக்க வைத்தால் தமக்கு எதிரான போராட்டம் கைவிடப் படலாமென குருட்டுத்தனமாக நம்பிய கோதபாய, மகிந்தவை நெருக்கியே பதவி துறக்க வைத்தாரென்பது மகிந்தவின் புதல்வர்கள் ஊடாக வெளியான மற்றொரு தகவல். இதன் தொடர்ச்சியாக மே மாதம் 12ம் திகதி ரணில் விக்கிரம

சில்வா ஊடாக இருந்தது என்பதை பூடகமாக தெரிவிப்பதாக அமைந்துள்ளது. கோதபாயவுடன் ரணிலையும் பதவி நீக்க வேண்டுமென அமெரிக்காவும் இந்தியாவும் தெரிவித்ததாகக் கூறும் விமல் வீரவன்ச, இவ்விடயத்தில் சவேந்திர சில்வாவின் வகிபாகம் என்னவாக இருந்ததென்பதை ஊகித்துக் கொள்ளலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் வாசகர் கருத்தோட்டத்துக்கு விட்டுள்ளது.

இறுதிக் காலங்களில் செய்திகள் வெளிவந்தன. அது மட்டுமன்றி அரகலய போராட்டக்காரருக்கும் தூதுவர் ஜீலிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகவும் சொல்லப்பட்டு வந்தது. ஆனால் இவை எதுவுமே அதிகாரபூர்வமாக எப்போதும் வெளியிடப்படாதவை.

விமல் வீரவன்சவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை கதாபாத்திரங்களும் இன்றும் உயிருடன் இருப்பவர்கள். நிகழ்கால அரசியலில் பழமும்



அதேசமயம், அமெரிக்காவுக்கான தூதுவர் ஜீலி குறிப்பிட்ட காலகட்டத்தில் நடந்து கொண்ட விதமும் மேற்கொண்ட சில நடவடிக்கைகளும் இப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளன.

சபாநாயகர் மகிந்த யாப்ப அபேவர்த்தனவை அமெரிக்க தூதர் நேரில் சந்தித்து கோதபாய பதவி விலகப்

தின்று கொட்டை போட்டவர்கள். இவர்களுள் பலர் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வர துடித்துக் கொண்டிருப்பவர்கள். இந்த வகையில் இந்தப் புத்தகம் பற்றிய தரவுகளுக்கு அவர்கள்

வாய் திறந்தால் சில உண்மைகள் அம்பலமாகலாம். ஆகக் குறைந்தது சபாநாயகர் மகிந்த யாப்ப அபயவர்த்தன இது பற்றிய அறிக்கையொன்றை வெளியிட வேண்டிய கடப்பாடுடையவர். இவர் வெளியிடும் தகவலின் ஊடாகவே விமல்வீரவன்ச, அமெரிக்க தூதுவர் ஜீலி உட்பட சம்பந்தப்பட்டவர்கள் யார், எந்த இடத்தில் நிற்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

# மறக்க முடியாத போராட்டத்தில் 9 மறைக்கப்பட்ட கதை!

கட்டுரையாளர்:
கனடாவில் இருந்து
– பனங்காட்டான் –

தன எனவும், இது தொடர்பான நடவடிக்கைகளிலும் அரகலய போராட்டத்திலும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி பிரதான பங்கு வகித்தாரெனவும் இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை இன்றைய அரசியல் களத்தில் ஒரு வெடிகுண்டாகவே நோக்கலாம்.



கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி மிரிகானாவிலுள்ள கோதபாயவின் இல்லத்தின் முன்னால் ஆரம்பித்த போராட்டத்தின் சில நாட்களில் விமல் வீரவன்சவை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி வீச கோதபாய விரும்பி

சிங்க பிரதமராக கோதபாயவினால் நியமிக்கப்பட்டார்.

விமல் வீரவன்சவினால் வெளியிடப்பட்ட புத்தகம், மே மாதம் ஒன்பதாம் திகதி கோதபாய மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுகிறது. அத்துடன் இந்தியாவில் நடைபெற்ற பிராந்திய நட்பு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு மாநாட்டில் சவேந்திரசில்வா பங்குபற்றியமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் விமல் வீரவன்ச சுட்டியுள்ளார்.

இது, கோதபாய பதவி நீக்கத்தில் இந்தியாவின் பங்களிப்பு சவேந்திர

போவதை முற்கூட்டியே தெரிவித்து, சபாநாயகரை ஜனாதிபதியாக பதவியேற்குமாறு கேட்டுக் கொண்டாராயினும் அரசியல் அமைப்பின் பிரகாரம் அது சாத்தியப்படாது என சபாநாயகர் பதிலளித்ததாகவும் இப்புத்தகம் தெரிவிக்கிறது.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த பொழுது மரணித்ததால் அரசியலமைப்பின்படி அன்றைய பிரதமர் டிங்கிரி பண்டா விஜேதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றதை சபாநாயகர் அமெரிக்க தூதுவருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த முயற்சி கைவிடப்பட்டதென்றும் இந்நூல் தெரிவிக்கிறது.

இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் உடனடியாக மறுதலிக்கப்பட்டுள்ளன. கோதபாயவையும் படைத்துறை அதிகாரிகளையும் கொலை செய்ய நடவடிக்கை எடுத்தது பற்றிய தகவலை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

அமெரிக்க தூதுவர் ஜீலியும் இப்புத்தகத்தில் தம்மைப் பற்றி குறிப்பிட்ட கருத்துகளை கற்பனைக் கதையென்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க தூதுவரின் செயற்பாடுகள் பற்றி பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கோதபாயவோடு ரணிலையும் பதவி நீக்குவது, சபாநாயகரை சந்தித்து ஜனாதிபதியாகப் பதவியேற்குமாறு வேண்டியது என்பவற்றில் எதனை அவர் மறுக்கிறார்? ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையுமே மறுக்கிறாரா?

கோதபாய ஜனாதிபதியாக இருந்த போது அநேகமாக தினசரி அமெரிக்க தூதுவர் அவருடன் தொடர்பில் இருந்ததாகவும், பல சந்தர்ப்பங்களில் அவர் மீது சில விடயங்களை திணித்து நிர்ப்பந்தித்ததாகவும், சில சமயங்களில் கோதபாய உளச்சித்திரவதைக்கு உள்ளானதாகவும் கூட அவரது பதவியின்

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தளவில் சில விடயங்கள் அவருக்கு நன்கு தெரிந்தவையாக இருக்கும். சில சமயம் இந்த விடயங்கள் அவருக்கு சாதகமானவையாக அமையக்கூடும். போர்க்கால இராணுவ தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா இப்புத்தகம் பற்றி கருத்துக் கூறுகையில் ரணிலின் அரசியலுக்கு பலமூட்டுவதாகவும் சாதகமாகவும் விமல் வீரவன்ச இப்புத்தகத்தை எழுதியுள்ளதாகவும், ரணிலின் அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளும் நோக்கம் அவருக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

ஒரு வகையில் பார்க்கின் இலங்கை அரசியலில் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிகள் போன்று இந்தப் புத்தகத்தை நோக்கின் அதில் தவறிருக்க முடியாது.

இப்புத்தகம் தொடர்பாக அனைவருமே மௌனம் சாதிப்பவர்களாக இருப்பின் பொதுமக்கள் இருட்டினுள் கறுப்புப் பூனையை தேடிய கதையாகவே எல்லாம் முடிந்துவிடும்.

மறக்கமுடியாத போராட்டத்தில் '9 – மறைக்கப்பட்ட கதை' கடந்த வருட மே, ஜீன், ஜீலை ஒன்பதாம் திகதிகளின் போராட்டங்கள் கற்றுத்தந்த அரசியல் பாடங்கள் வித்தியாசமானவை. இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னைய காலங்களில் இடம்பெற்ற சதிப்புரட்சிகளின் தொடர்ச்சியாக இதனைப் பார்க்கலாம். இதற்கு போதை ஊசி ஏற்றுவதைப் போன்று வெளிவந்துள்ளது விமல்வீரவன்சவின் '9 – மறைக்கப்பட்ட கதை புத்தகம்.

# மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சி இலங்கையில் உருவாகுமா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– ஈழநாட்டிற்காக பார்த்தீபன் –

உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் அறிவித்ததைத் தொடர்ந்து, தற்போதைய சமூக நிலை தொடருமா என்ற கேள்வி பல்வேறு மட்டங்களிலும் எழுந்திருக்கின்றது. உள்நாட்டு கடன்களை மறுசீரமைக்க ஜனாதிபதி என்ன செய்யப் போகின்றார் என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால், இரண்டு வழிகள் மட்டும் தான் அவருக்கு இருக்கின்றது. இந்த இரண்டு வழிகளில் எதனை அவர் தெரிவு செய்தாலும், இதனால் பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொதுமக்கள் தான். இது மீண்டும் ஒரு கிளர்ச்சிக்கு வழிவகுக்கலாம். எதிரணிகளும் அதனைத் தூண்டி விடலாம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எப்படியும் கொண்டு வர வேண்டும் என அரசாங்கம் துடிப்பதற்கு அதுதான் காரணமா?

நாணய நிதியத்தின் கடனுதவியுடன் பொருளாதாரப் பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது போன்ற ஒரு தோற்றத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் காட்டிக் கொண்டிருக்கும் நிலைமையில், கடந்த வருடத்தில் ஏற்பட்டதை விடவும் மோசமான நிலைமை 2026 இல் ஏற்படும் எனக் குறிப்பிட்டிருக்கும் உதய கம்மன்பில, அதற்கான காரணங்களையும் முன்வைத்திருக்கின்றார்.

தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் ஒரு துளியேனும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகையால், 2026 இல் கடன் குண்டு வெடிக்கும் என்பது தான் அவரது கருத்து.

ரூபாய் இல்லாமல் அல்ல, டொலர் இல்லாத காரணத்தால்தான் ஐ.எம். எப்



வேலைத்திட்டத்துக்கு சென்றுள்ளீர்கள். எனினும், இந்த உடன்படிக்கை முழுவதிலும் ரூபாய் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. டொலர் பிரச்சினைக்கு தீர்வு இல்லை.

ஒரு வருடத்துக்கு இறக்குமதி செலவுக்காக மட்டும் 22 பில்லியன் டொலர் செலவாகிறது. கடன் செலுத்துவதற்காக 7 பில்லியன் டொலர் தேவைக்கப்படுகின்றது. ஆகையால் மேலும் கடனாளியாவதை தவிர டொலர் பிரச்சினைக்கு இதில் தீர்வு இல்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த உடன்படிக்கை தொடர்பில் பல்வேறு கேள்விகளும், சந்தேகங்களும் உருவாகியிருக்கின்றது என்பதை அவரது உரை வெளிப்படுத்துகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் உள்ளடங்கும் தகவல்களை நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு கோரிக்கை முன் வைத்த போதும், மார்ச் மாதத்தில் உடன்படிக்கை சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு இறுதி அனுமதி வழங்கும் வரையில் அது தொடர்பான தகவல்கள் முன்வைக்க முடியாது என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



ஆனால் இன்று வரை முழுமையான தகவல்கள் வெளியிடப்படவில்லை. இது ஒரு மர்மமாக நீடிக்கிறது என்பது தான் எதிர்க்கட்சிகளின் கருத்து.

இந்த நிலையில் தான் ஜனாதிபதி வெளியிட்ட உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்த அறிவிப்பு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடன் மறுசீரமைப்பின் போது வெளிநாட்டுக் கடன்கள் மட்டுமன்றி, உள்நாட்டுக் கடன்களும் மறுசீரமைக்கப்படும் என ஜனாதிபதி தனது நாடாளுமன்ற உரையில் கூறியிருக்கின்றார். இதற்கு எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு விதமான விளக்கத்தை கொடுத்து மக்களை அச்சமூட்டிக் கொண்டுள்ளன.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பின் போது உள்நாட்டு கடன் உள்ளடங்காது என்று நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோர் அடிக்கடி கூறியிருந்தார்கள். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பரந்துபட்ட வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநர் இப்போது கூறியுள்ளார். ஜனாதிபதியும் இதனைத்தான் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.

இது தொடர்பில் மேலதிக தகவல்களை ஜனாதிபதி வெளியிடாமலிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. எதிர்க்கட்சிகள் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த அதனைப் பயன்படுத்துகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாது என்பதனை அரசாங்கத்தினால் உறுதிப்படுத்த முடியுமா? இது தொடர்பான முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன? என அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பியிருக்கின்றார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.


அரசாங்கம் தற்போது இணங்கியுள்ள விடயங்களை செயற்படுத்தும் போது பலமான சமூக பாதுகாப்பு கட்டமைப்பு அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார். அரசாங்கத்துக்கு இன்று அதிகளவு உள்நாட்டு நிதி வளத்தைக் கொடுக்கக்கூடியதாக இருப்பது ஊழியர் சேமலாப நிதியமும், ஊழியர் நம்பிக்கை நிதியமும் தான். அதனால் தான், அவற்றில் அரசாங்கம் கைவைக்கலாம் என்ற அச்சத்தை உருவாக்குவதில் எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் வெற்றி பெறுகின்றன. அவற்றில் கை வைத்தால் பாரிய மக்கள் கிளர்ச்சி ஒன்று வெடிக்கும் என்பது ரணிலுக்குத் தெரியும்.

இந்த நிலையில், உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்புச் செய்தல் என ஜனாதிபதி எதனைக் குறிப்பிடுகின்றார். அதன் மூலமாக எவ்வாறான நிலை ஏற்படும் என கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தியிடம் கேட்டோம். அதற்கு அவரளித்த பதிலை இங்கு தருகிறோம் –

இலங்கைக்கு இரண்டு விதமான கடன்கள் உள்ளன. ஒன்று வெளிநாட்டுக் கடன்கள். இரண்டாவது உள்நாட்டுக் கடன்கள். உள்நாட்டுக் கடன்களைப் பொறுத்தவரையில் வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள். இரண்டாவது ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொண்ட பணம். வங்கிகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடன்களைப் பொறுத்தவரையில் ரூபாவாகப் பெற்ற கடன்களும் உள்ளது. டொலரில் பெற்ற கடன்களும் உள்ளன. இப்போது வெளிநாட்டுக் கடன்களை அரசாங்கம் மறுசீரமைப்பு செய்யும் போது, வெளிநாட்டவர்கள் இதனை நீங்கள் உள்நாட்டிலும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்கள்.

உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டுமாக இருந்தால், கடன்களைக் கொடுத்த வங்கிகள், மற்றும் ஈ.பி.எப்., ஈ.ரி.எப். போன்ற நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச வேண்டும். இதனை அரசாங்கம் செய்ய முற்படும் போது ஈ.பி.எப்., ஈ.ரி.எப். போன்றவற்றுக்கான வட்டியில் ஒரு பகுதியை சம்பந்தப்பட்டவர்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனை விட கடுமையான ஒரு நிலை ஏற்பட்டால், இந்த நிதியங்களிலிருந்து அதன் உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தில்

(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# மதமாற்றம்:- இருபக்க காரணங்களையும் விளங்கிக் கொள்ளல்!

கட்டுரையாளர்
யாழ்ப்பாணத்தில் இருந்து
கந்தையா அருந்தவபாலன்



மதம் மாறுதல் அல்லது மாற்றப்படுதல் என்பது உலகில் புதிய விடயமோ அன்றி புதுமையானதொரு விடயமோ இல்லை. தனியொருவன் மதம் மாறுவதற்கப்பால் மக்கள் கூட்டாக மதம் மாறுவதில் பல்வேறுகாரணிகள் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளதை நாடுகளின் வரலாறுகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளமுடியும்.

மன்னராட்சிக் காலத்தில் மன்னனின் மதம் எதுவோ அதுவே குடிமக்களின் மதமாகவும் இருந்தது. மன்னன் புதிய மதமொன்றைத் தழுவும் போது மக்களும் அம் மதத்தைப் பின்பற்ற வேண்டிய நிலைமைகள் உருவாகியது.

இலங்கையில் தீச என்ற தேவநம்பிய தீசன் புத்தமதத்தைத் தழுவியதால் மக்களும் அதனைப் பின்பற்றினர் என்பது வரலாறு. அதேபோல சமணம், பௌத்தம் என்பவற்றின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மன்னர்களில் தங்கியிருந்தது என்பது தமிழக வரலாறு. இதற்கு மாறாக குடியேற்ற ஆட்சியாளர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளில் மக்களை மதம் மாற்றுவதற்கு பல்வேறு உத்திகளைக் கையாண்டனர்.

அதிகாரப் பிரயோகத்துக்கு அப்பால் ஒருபுறத்தில் கல்வி, அரசவேலை போன்ற சலுகைகள் மூலமும் மறுபுறத்தில் பின்தங்கிய மக்களில் தாமும் ஒருவராக மதபோதகர்கள் வாழ்ந்து வழி காட்டியதன் மூலமும் தமது மதத்தைப் பரப்பினார்கள்.

கோட்டை அரசன் தர்மபால, டொன் யுவான் தர்மபால ஆகவும் அரசிடோனா கதரினாவாகவும் மாறியதிலிருந்து இலங்கையில் கிறிஸ்தவம் வேரூன்றத் தொடங்கியது. இலங்கையின் கரையோரங்களில் வாழ்ந்த பின்தங்கிய மக்களில் கணிசமானோர் கத்தோலிக்கத்தைத் தழுவிய அதேவேளை மேட்டுக்குடிகளில் கணிசமானோர் கல்வி, அரசவேலை, அதிகாரம் போன்ற சலுகைகளுக்காக புரட்டஸ்தாந்த பிரிவுக் கிறிஸ்தவர்களாக மாறினர்.



இன்று பௌத்தமதக் காவலராகத் தம்மைக்க காட்டிக் கொள்ளும் இன்றைய அரசியல் தலைவர்களின் முன்னோர்கள் கிறிஸ்தவத்திற்கு மாறி வசதி வாய்ப்புகளைப் பெற்றவர்கள் தான்.

சொலமன் வெஸ்றிட்ஜ்வே டயஸ் (SWRD) பண்டாரநாயக்க, டொன் அல்வின் (DA) ராஜபக்ஷ, யூனியஸ் றிச்சாட் (JR)ஜெயவர்த்தனா, சிறில் எஸ்மன்ட் ரணில் விக்கிரமசிங்க போன்ற பெயர்களே அதைக் கூறும். எனவே மதம் மாறுவதில் வெறுமனே நம்பிக்கைகள் என்பதற்கப்பால் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளே அதிகளவு செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளன என்பதே வரலாறு.

இவ்வடிப்படையிலேயே தற்போது சைவர்கள் கிறிஸ்தவத்துக்கு மாறுதல் அல்லது மாற்றப்படுதல் என்ற விடயத்தையும் நாம் நோக்க வேண்டும்.



மத மாற்றுவதன் மூலம் சைவத்துக்குச் சவாலாகவும் சைவர்களிடையே அச்சத்தையும் தோற்றுவிக்கும் செயல்களில் நாளுக்குநாள் புதிது புதிதாக முளைக்கும் நவீன கிறிஸ்தவ சபைகளே காணப்படுகின்றன.

அதேவேளை குறிப்பிட்ட இடங்களில் நிகழ்ந்த விரும்பத்தகாத சில சம்பவங்களைத் தவிர மரபுரீதியான கத்தோலிக்க, புரட்டஸ்தாந்த சபைகள் இவ்வாறு ஈடுபடுவது அரிதாகும். எனினும் இவர்கள் புதிய கிறிஸ்தவ சபைகளின் அத்துமீறல்கள் அதனால் ஏற்படக்கூடிய சமூகப் பிளவு தொடர்பாக மௌனம் காப்பது சைவர்களிடத்து மனக்குறையைத் தோற்றுவித்துள்ளது என்பதையும் மறுக்க முடியாது.

பிரச்சினையொன்றுடன் தொடர்பு படும் தரப்புகள் ஒவ்வொன்றும் தமது பக்க நியாயங்களைத் தூக்கிப் பிடிப்பது தான் வழமை. மறுபக்கத்து நியாயங்களை ஏற்றுக் கொள்ளவோ தீர்வு காணவோ விரும்புவதில்லை. இது மத மாற்றத்துக்கு எதிராக குரலெழுப்பும் சிவசேனை, நாகசேனை போன்ற தீவிர அமைப்புக்ளுக்கும் மதத் தலைவர்களுக்கும் மட்டுமல்ல மதமாற்றச் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடும் கிறிஸ்தவ சபைகளுக்கும் பொருந்தும். குறிப்பாக மதமாற்றத்துக்கு எதிராகக் குரல் எழுப்புவோர் எதிர்த் தரப்பைக் குற்றஞ் சாட்டுவதில் மட்டும் கவனம் செலுத்துகிறார்களேயன்றி தமது பக்கப் பலவீனங்களை உணரவோ களையவோ முயல்வதாகத் தெரியவில்லை. எல்லா மனித நடத்தைகளுக்கும் இருப்பது போலவே மத மாற்றத்திலும் இழுவைக் காரணிகளும் (Pulling Factors) தள்ளுங்காரணிகளும் (Pushing Factors) செல்வாக்குச் செலுத்துகின்றன. தம்மதத்தைக் காக்கவும் மதமாற்றத்தைத் தடுக்கவும் உண்மையாக விரும்புவோர் முதலில் தமதுபக்கத்திலுள்ள தள்ளுங்காரணிகளுக்கு தீர்வு காணவேண்டும்.

இவை மதமாற்றத்தைத் தடுப்பதற்கு மட்டுமல்ல அருகிப் போகும் மத ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும் அவசியமாகும். ஏனெனில் பெரும்பாலான கோயில்களில் உபயகாரரைத் தவிர வழிபடுவோர் குறைவு. இயந்திரங்களே வாத்திய ஒலிகளை இசைக்கின்றன. சாமி தூக்குவதற்கு ஆட்களை வலிந்து அழைக்கும் நிலைமை. சமய அறிவு, ஆன்மீக சிந்தனைகள் என்பவற்றை வளர்ப்பதில் கோயில்கள் மற்றும் சைவ நிறுவனங்கள் எந்தளவுக்கு இன்று முயலுகின்றன. ஊர்க் கோயில் ஒவ்வொன்றும் தனது ஊட்டப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு சமய அறிவையும் ஈடுபாட்டையும் வளர்ப்பதற்கான ஏதாவது செயற்றிட்டங்களைக் கொண்டுள்ளனவா? குறைந்தது திருவிழாக் காலங்களில் வருவோர்க் காதல் சமயஅறிவையும் ஆன்மீக சிந்தனைகளையும் வழங்கும் நிலையில் எத்தனை குருக்கள் அல்லது தர்மகர்த்தா சபையினர் உள்ளனர்? 'திராவிட கானம் இசைக்க' வழங்கும் சிறிய பொழுது தவிர புரியாத மந்திரங்களும் கிரியைகளும் அறிவு மிகுந்த இன்றைய சமூகத்தில் சமய அறிவையும் ஈடுபாட்டையும் வளர்க்க எவ்வளவு தூரம் போதுமானவை?

சமயச் சொற்பொழிவுக்கும் தேவாரம் பாடுவதற்கும் விலை செலுத்தும் ஒரு நிலைக்கு சைவம் மாறியது வளர்ச்சியா? தளர்ச்சியா? உண்மையில் இன்று சைவசமய அறிவை வளர்ப்பதற்கான ஒரே மூலமாக பள்ளிகளில் கற்பிக்கப்படும் சைவநெறிப் பாடமே உள்ளது. அதுவும் பரீட்சையை நோக்காகக் கொண்டிருப்பதுடன் பெரும்பாலும் நேர அட்டவணையை நிரப்புவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும் ஆசிரியர்களாலேயே கற்பிக்கப்படுகிறது. சமயபாடம் கற்பிக்கும் எத்தனை ஆசிரியர்கள் பாடப் புத்தகத்துக்கு அப்பால் சென்று கற்பிக்கி றார்கள்? பாடப் புத்தகத்திலுள்ள தேவாரங்களைப் பண்ணோடு இசைத்து விளக்கமும் வழங்குகிறார்கள்? தேவாரப் பாடல்களும் வசன வாசிப்புகளாக இருக்கும் போது இசைக்கும் வல்லமை எவ்வாறு உருவாகும். இதனால் சங்கீதம் கற்கும் மாணவர்களே தேவாரங்கள் பாடும் நிலை. ஆனால் கிறிஸ்தவப் பிள்ளைகள் அனைவராலும் எப்படிச் சிறப்பாகப் பாடமுடிகிறது?

சமூக நிறுவனங்களில் ஒன்று என்ற வகையில் கோயில்கள் சமூக நலன்சார் விடயங்களில் எவ்வளவு தூரம் பங்கெடுக்கின்றன? எத்தனை கோயில்கள் சொந்த நிதியிலிருந்து அல்லது தனது தலைமையில் நிதிதிரட்டி சமூகத்தின் தேவைகளை குறிப்பாக நலிந்தோர்க்கான உதவிகளைச் செய்கின்றன. செல்வச் சந்நிதி அன்னதான ஆச்சிரமத்தால் செய்ய முடிந்த உதவிகளைக் கூட கோயில்களோ அன்றி மதமாற்றத்துக்கு எதிராகக் குரல் கொடுப்போரோ செய்ய முன் வருவதில்லையே. கொரோனா காலத்தில் கோயில்களில் திருவிழாக்கள் இடம்பெறவில்லை. திருவிழாவுக்குச் செலவழிக்கும் பல இலட்சங்களில் ஒரு சில இலட்சங்களைக் கூட அந்நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதற்கு பெரும்பாலான கோயில்களும் உபயகாரர்களும் விரும்பவில்லையே கோயில் திருப்பணி என்பது கோபுரங்கள் கட்டுவது, வண்ணம் பூசுவது, வளங்களைப் பெருக்குவது என்பதற்கப்பால் நலிந்தோர் துயர் துடைப்பதுவும் ஒன்று என எண்ணவில்லையே. அடியவர்க்கு அமுதூட்டல் என்பது அன்னதானத்துக்கு அப்பால் பசித்தோர்க்கு உணவளிப்பதுவும் ஒன்று என்று வழங்க வில்லையே.

சரி பிழை என்பதற்கப்பால் பசித்த வயிற்றுக்கு சோறுபோட்டு துன்பங்களில் துயர்போக்குபவன் பின்னால் படிப்பறிவு குறைந்தவர்கள் செல்வது ஒன்றும் ஆச்சரியமானதல்லவே. கோயில் கட்டிடங்களுக்கும் ஆடம்பர விழாக்களுக்கும் கிடைக்கும் நிதியை விடக் கூடுதலாகவா மதமாற்றச் சபைகளுக்கு வெளிநாட்டு நிதி வருகிறது? இங்கு நிதி பிரச்சினையன்று. சிந்தனையும் மனமும் மாறாதிருப்பதே பிரச்சினை.

இவற்றை விட இன்னொரு முக்கிய தள்ளுகாரணியாக இருப்பது இந்துக்குள் கரைந்து விட்ட இன்றைய சைவத்தின் சமத்துவமின்மை. நவீன கிறிஸ்தவ சபைகளுக்கு மாறுவோரில் பெரும்பாலானவர்கள் சாதி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஒதுக்கப் பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும் ஆவர்

இவர்கள் சென்ற நூற்றாண்டின் நடுப் பகுதிவரை கோயில்கள், உணவகங்களில் தமது அடிப்படைச் சமத்துவ உரிமைக்காகப் போராடியவர்களின் வழித் தோன்றல்கள். போராட்டங்களாலும் சட்டங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட அவர்களது உரிமைகள் பெரும்பாலான கோயில்களில் இன்று பெயரளவில் மட்டுமே உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

சாமி காவுதல் போன்ற உள்ளகத் திருப்பணிகள்,அன்னதானம் போன்றவை இன்னும் அவர்களால் அணுகப்பட முடியாதவை. இவை தொடர்பாக அண்மையில் பிபிசி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட காணொலி உண்மைக்குப் புறம்பானது என எவரும் கண்டிக்காமை இந்த உண்மையை அங்கீகரிப்பதாகத் தானே அமையும். சைவக் காப்பகங்களில் சேர்ப்பதற்கு சாதி பார்த்தலும் தேரிழுப்பதற்கு 'பைக்கோ' பயன்படுத்தியதும் பெருமைக்குரிய இச் சைவப் பூமியில் தானே. தனக்கு அங்கீகாரம் கிடைக்காத இடத்தை வெறுத்து அங்கீகாரம் கிடைக்கும் (22ம்பக்கம் பார்க்க)

# மறைக்கப்பட்ட கதை கற்பனையா?

ஒன்பது: மறைக்கப்பட்ட கதை', ("Nine: The Hidden Story) என்ற தலைப்பில், விமல் வீரவன்ச எழுதி வெளியிட்டுள்ள நூலும், அந்த நூல் வெளியீட்டு விழாவில் விமல் வீரவன்ச நிகழ்த்திய உரையும், அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் புயலை கிளப்பி விட்டிருக்கிறது. கடந்த ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக இடம் பெற்ற அரகலய, போராட்டங்கள் மற்றும், அவற்றின் பின்னணி, அதன் பின்னால் இருந்த சர்வதேச அரசியல் சூழ்ச்சிகள் குறித்து எழுதப்பட்டுள்ள நூல் தான் இது.

இந்த நூலில் அவர் பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டிருக்கிறார். அவை உண்மையா பொய்யா? ,ட்டுக் கட்டப்பட்ட கற்பனையா? ஊகங்களா? வதந்திகளா? என்ற விவாதத்துக்குள் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் விமல் வீரவன்சவின் கருத்துகளுடன் உடன்பாடில்லாத தரப்புகள், உடனடியாகவே மறுப்புகளை வெளியிட்டு இருக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் முப்படை தளபதிகளையும் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து படுகொலை செய்யும் திட்டம், அந்தத் திட்டத்தில் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா பங்காளி ஆக்கப்பட்டமை, சபாநாயகர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கு அமெரிக்கா மற்றும் இந்தியா மேற்கொண்டதாக கூறப்படும் முயற்சி உள்ளிட்ட விடயங்கள் சர்ச்சைக்குரிய விவாதங்களை கிளப்பி இருக்கிறது.

கடந்த ஆண்டு 'கோட்டா வீட்டுக்குப் போ' என்ற தொனிப் பொருளில் ஆரம்பிக்கப்பட்ட காலி முகத்திடல் போராட்டங்களின் பின்னால் மறைக்கப்பட்ட உண்மைகள், வெளிவராத இரகசியங்கள் பல இருக்கின்றன. பலரது முடிவுகள் சந்தேகங்களை எழுப்பியுள்ளன. பலரது நடத்தைகள் கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஜெனரல் சவேந்திர சில்வா இந்த போராட்டத்தின் போது நடந்து கொண்ட முறை தொடர்பாக, ஏற்கனவே சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகி இருந்தன. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, மே 9 வன்முறை சம்பவங்களை தடுப்பதில் முப்படைகள் மற்றும் பொலிஸாரின் செயல்பாடுகள் திருப்தியற்ற முறையில் இருந்ததா என்பதை கண்டறிய ஒரு விசாரணை குழுவை நியமித்திருந்தார்.

அவருக்கு அப்போது காணப்பட்ட அதிருப்தி தான், அந்த குழுவை நியமிக்க காரணம். அந்த குழுவின் அறிக்கையில் ஜெனரல் சவேந்திர சில்வாவின், செயற்பாடுகள் குறித்து. சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது. வன்முறையை தடுக்க ஜனாதிபதி கோட்டா தெளிவான உத்தரவுகளை பிறப்பித்திருந்த போதும், அவற்றை நடைமுறைப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று விசாரணை குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்ட போதும் அதன் மீது அவர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்காக ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆள் என்ற முடிவுக்கு வர முடியாது. ஆனால் அவர் கடந்த ஆண்டு மக்கள் கிளர்ச்சியின் போது நடந்து கொண்ட முறை, பல்வேறு மட்டங்களில் சந்தேகங்களை தோற்றுவித்திருக்கிறது. விசாரணை குழு எழுப்பிய சந்தேகமும் அதில் ஒன்று. இப்போது விமல் வீரவன்ச கிளப்பியுள்ள சந்தேகம் இன்னொன்று. இந்த நிலையில், அவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசுவாசம் ஆனவரா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது. ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமெரிக்க தூதுவர் ஜீலி சங் அழுத்தம் கொடுத்தார் என்றும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் இடைக் கால அரசு ஒன்றை உருவாக்க அவர் சதி செய்தார் என்றும் விமல் வீரவன்ச கூறியிருக்கிறார். அவ்வாறு இடைக்கால அரசு உருவாக்கப்பட்டு இருந்தால் அதில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் இடம்பெற்றிருப்பார்கள் என்று விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறார். கோட்டாபாய ராஜபக்ஷவை போலவே, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜெனரல் சவேந்திர செல்வா விசுவாசமானவராக செயற்பட்டிருக்கவில்லை என்பது தான் அவரது நிலைப்பாடு.



இந்தச் சதிக்கு பின்னால் அமெரிக்காவும் இந்தியாவும் இருந்தன என்பது அவரது குற்றச்சாட்டு. மே 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்குள் வைத்து கோட்டாபய ராஜபக்ஷவையும், முக்கிய படைத் தளபதிகளையும் படுகொலை செய்யும் திட்டம் தீட்டப்பட்டிருந்ததாகவும், ஆனால் சந்தேகத்திற்கு உரிய வகையில் ஜெனரல் சவேந்திர சில்வா இந்தியாவுக்கு சென்று விட்டார் என்றும், விமல் வீரவன்ச குற்றம் சாட்டியிருக்கிறார்.

ஆனால் மே 9ஆம் திகதி, அலரி மாளிகையில் இருந்து அரசியல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட போது, ஜெனரல் சவேந்திர சில்வா கொழும்பிலேயே தங்கியிருந்தார். கோட்டாபய ராஜபக்ஷ அவருக்கு நேரடியாக உத்தரவு பிறப்பித்த பின்னர், காலிமுகத்திடல் போராட்டக்களத்தில், வன்முறைகளை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவரே தலைமை தாங்கிருந்தார்.

அதேவேளை, ஜீலை 7ஆம் திகதி, அதாவது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான இறுதிக் கட்டப் போராட்டம் உச்ச நிலையை அடைவதற்கு முன்னர், ஜெனரல் சவேந்திர சில்வா இந்தியாவுக்கு சென்றிருந்தார் என்பது உண்மை. கொழும்பு பாதுகாப்பு மாநாடு (Colombo Security Conclave என்ற பெயரில், ஆண்டு தோறும் இடம் பெறும் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே, அவர் புதுடில்லி சென்றிருந்தார் என்று பாதுகாப்பு அமைச்சு கூறியிருக்கிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே அவர் அந்த பயணத்தை மேற் கொண்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால் விமல் வீரவன்சவோ, இந்தப் பயணம் ஒரு சதித்திட்டம் என்றும், சவேந்திர சில்வா நாடு திரும்பும் போது இடைக்கால அரசை உருவாக்கும் செயற்பாடுகள் நிறைவடையும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததாகவும் கூறியிருக்கிறார். விமல் வீரவன்சவினால், இந்தச் சதித் திட்டத்தில் தொடர்புடையவர் என்று நேரடியாக குற்றச்சாட்டப்பட்டுள்ளவர் அமெரிக்க தூதுவர் ஜீலி சங். அவர் கோட்டாபய ராஜபக்ஷவையும் ஜெனரல் சவேந்திர சில்வாவையும் தனது விருப்பத்திற்கு ஏற்ப ஆட்டி வைத்தார் என்று விமல் வீரவன்ச கூறியிருக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பி செல்லும் போது ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று அமெரிக்க தூதுவர் அவருக்கு அழுத்தம் கொடுத்தார் என்றும், அதற்கமைய கொழும்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வது மற்றும் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவது என இரண்டு கடிதங்கள் மாலைதீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அவற்றில் பதவி விலகல் கடிதத்தில் மாத்திரம் கையெழுத்திட்டிருந்தார் என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டிருக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினால், பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க தான், பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்க வேண்டும். அதனால் தான் அவரை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது,

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதை அமெரிக்கா விரும்பவில்லை என்பது தான் அவரது வாதம். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்பதை அமெரிக்கா ஏன் விரும்பவில்லை என்று விமல் வீரவன்ச விளக்கவில்லை.

ஆனால், அமெரிக்கா இடைக்கால அரசு ஒன்றை உருவாக்குவதில் அக்கறை செலுத்தியதாக குறிப்பிட்டிருக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி, ரணில் விக்கிரமசிங்கவும் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தால், அரசியலமைப்பின்படி சபாநாயகர் தான் பதில் ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும். அமெரிக்க தூதுவர் ஜீலி சங், சபாநாயகரின் இல்லத்துக்கு சென்று, ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தி கேட்டுக் கொண்டார் என்றும், ஆனால் அவர் அதற்கு மறுத்து விட்டார் என்றும் விமல் வீரவன்ச தகவல் வெளியிட்டிருக்கிறார்.




கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்


அரசியல் வன்முறைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த போது, அமெரிக்க தூதுவர் ஜீலி சங், சபாநாயகருடன் அடிக்கடி சந்திப்புகளை நடத்தி இருந்தார் என்பது உண்மை. ஜனநாயகத்தை நிலை நாட்டுமாறும், அரசியலமைப்புச் சட்டத்துக்கு அமைய செயற்படுமாறு அவர் பல முறை வலியுறுத்தி இருந்தார். எனினும், சபாநாயகரை பதில் ஜனாதிபதியாக (22ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். உத்யோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது.




ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமத மாகும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். கணவன், மனைவி அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும்.




மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதுரி யமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் முடிவதில் தாமதப் போக்கு காணப்படும். தேவையற்ற மனச்சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர் களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.



சிம்மராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவர். முயற்சிகள் சாதகமான பலன் தரும். ராசிநாதன் செவ்வாயால் லாபம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.



கன்னிராசி அன்பர்களே! கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமத மாகலாம். ராசிக்கு 12ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம்.




துலாம்ராசி அன்பர்களே! செயல் திறமை அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் விரிவாக்கத்திற்கு தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச் சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தினரிடம் நன்மதிப்பை பெறுவீர்கள்.




விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கப்பூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும்.







தனுசுராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர் பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.



மகரராசி அன்பர்களே! எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். புதிய நண்பர்கள் கிடைப்பர். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடிதப் போக்கு சாதகமான பலன் தரும்.



கும்பராசி அன்பர்களே! இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். எதிர் பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர் பார்த்த பணம் வந்து சேரும்.



மீனராசி அன்பர்களே! எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நட்பு வகையில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர் பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## மதமாற்றம்:- இருபக்க காரணங்களையும்

(20ம் பக்கத் தொடர்ச்சி) இடத்தை நாடுவதும் மனிதஇயல்புதானே. மறுபுறத்தில் புதிய கிறிஸ்தவ சபைகளில் இணைவோர் உண்மையான இறை நம்பிக்கையின் அடிப்படையில் தான் இணைகிறார்களா என்பது கேள்விக்குறி. சைவத்தில் இல்லை எங்கள் மதத்தில் தான் உள்ளன என அவர்கள் நம்ப வைக்கப்படுகிறார்கள். சைவத்தில் இல்லாத ஆன்மிகச் சிந்தனைகளுக்கும் நெறிகளுக்கும் மேலாக வேறு மதங்களில் ஏதும் சொல்லப்படவில்லை என்பதை தனது மதத்தையும் ஏனைய மதங்களையும் நன்றாக விளங்கிக் கொண்டவர்களுக்குப் புரியும்.

இங்கு நடப்பது என்னவெனில் சைவத்தில் காணப்படும் பலவீனங்களை அச் சபைகள் திட்டமிட்டு பலமாக, மாற்றிக் கொள்கின்றன என்பதாகும். அரசியல மைப்பினால் வழங்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தை இச்சபைகள் தவறாகப் பயன்படுத்துகின்றன. அச் சுதந்திரம் 'மதச் சுமூகவாழ்வு' நோக்கத்தின் அடிப்படையில் அதே அரசியலமைப்பால் மட்டுப்படுப் படுத்தப்பட்டுள்ளன என்பதையும் அச்சபைகள் கவனிக்க வேண்டும். ஒருவரின் பொருளாதார நிலையைப் பயன்படுத்தி அல்லது உதவிகள், பரிசில்கள் வழங்கி மத மாற்றஞ் செய்வதுவும் கட்டாய மத மாற்றமாகவே கொள்ளப்படும் என இந்திய உச்ச நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புகளும் கவனிக்கப்பட வேண்டும். இந் நிலைமைகளைப் கருத்திற் கொண்டு சிலைகள் வைப்பதாலோ, மதவெறுப்புணர்வை வளர்ப்பதாலோ சைவத்தை வளர்க்கவோ மத மாற்றத்தைத் தடுக்கவோ முடியாது.

## கடையடைப்புத் தேவையா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ச்சியான போராட்டங்களை ஒழுங்கமைக்க வேண்டும். கடந்த 13 ஆண்டுகளில் வெற்றி பெற்ற எல்லா மக்கள் போராட்டங்களும் ஒரு கட்சிப் போராட்டங்கள் அல்ல.குடிமக்கள் சமூகங்களோடு இணைந்த பல கட்சிப் போராட்டங்கள்தான்.எனவே போராடத் தெரியாத அல்லது போராட முடியாத கட்சிகள் கடையடைப்புக்கு அழைப்பு விடுகின்றன. அதேசமயம் அப் போராட்டம் பிழை என்று கூறும் கட்சியும் கடந்த 13 ஆண்டுகளாக சின்னப் பிள்ளைகளுக்கு கண்ணாடியில் நிலவை காட்டும் அரசியலைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

## தையிட்டி விகாரை:- பொலிஸ் தடைகளை

(3ம் பக்கத் தொடர்ச்சி) குற்றச் சாட்டுக்களும் இன்றி பலாலி பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்கள் பொலிஸ் தடைகளை மீறி உள்ளே சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் செ கஜேந்திரன் உள்ளிட்டவர்களை சந்தித்து தமது ஆதரவை தெரிவித்து கலந்துரையாடினர்கள். அதேநேரம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உழவு இயந்திரங்களில் முட்கம்பிகள் வீதி தடை கம்பிகள் என்பவற்றை விகாரைக்கு அருகில் வீதிகளில் போட்டு .வீதி தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

## மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சி

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு பகுதி வெட்டிக் குறைக்கப்படலாம். ஆக, நேரடியாக பாதிக்கப்படப் போவது பொதுமக்கள் தான். வங்கிகளைப் பொறுத்தவரையில் நிலையான வைப்புக்களில் உள்ள தொகைக் கான வட்டியில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை அரசாங்கம் எடுத்துக் கொள் ளலாம். இவ்வாறு உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு அரசாங்கம் சென்றால், வங்கிகள்தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும்.

இதில், அரசாங்கத்துக்கு கடன் வழங்கிய அத்தனை நிறுவனங்களும் ஒன்றில் கால நீடிப்புக்கு ஒத்துக்கொள்ள வேண்டும். அல்லது கொடுக்க வேண்டிய தொகை யில் ஒரு பகுதியைக் குறைப்பதற்கு ஒத்துக் கொள்ள வேண்டும். இதில் ஒரு சின்ன பிரச்சினை வந்தாலும் இது ஒரு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கும். உதாரணமாக வங்கியில் வைப்புச் செய்தவர்கள் அவற்றை மீளப் பெறுவதற்கு முற்பட்டால், வங்கிகளில் பெருமளவில் திரவத் தன்மை குறைவடையும். இவ்வாறான நிலையில் முழு வங்கித்துறையும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தெரிவித்த தகவலை விட வேறு எந்தவிதமான அறிவுறுத்தல்களும் இல்லை. இதனால் நிச்சயமற்ற தன்மை ஒன்று ஏற்படலாம். உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அதனை மிகவும் கவனமாக நிதானமாக செய்ய வேண்டும்என்று கூறுகின்றார் கலாநிதி கணேசமூர்த்தி. மறுபுறத்தில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதில் மேலும் கடன் களைப் பெறுவதில் மட்டும் வெற்றி பெற்றிருக்கும் அரசாங்கத்தினால், கடனி லிருந்து மீள்வதற்கான செயற்திட்டங்களில் எந்த வெற்றியையும் பெற வில்லை.

வெளிநாட்டு முதலீடுகளை எதிர் பார்த்தளவுக்குப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தொடர்ந்தும் பல தடை களும், நடைமுறைப் பிரச்சினைகளும் உள்ளன. இதனால், புலம்பெயர்ந்த மக்களும் முதலீடுகளைக் கொண்டு வருவதில் தயங்குகின்றார்கள். இந்த நிலையில் சர்வதேச நாணய நிதிய கடன்கள் மட்டும் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவிடவில்லை.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை அரசாங்கம் செய்யும் போது பொது மக்கள் கொதித்தெழுவார்கள் என்பது எதிர் பார்க்கக் கூடியது தான். அதனால் தான், அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதில் அவசரம் காட்டுகின்றதா?

(21ம் பக்கத் தொடர்ச்சி) பதவியேற்குமாறு, அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியதாக விமல் வீரவன்ச குறிப்பிடுவது புதிய தகவலாகும். அதே சமயம் கடந்த ஆண்டு அரசியல் எழுச்சியை அமெரிக்கா தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முற்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளில், முற்று முழுதாக உண்மை இல்லை என்று மறுக்க முடியாது. ரணில் விக்கிரம சிங்கவை அமெரிக்கா ஏன் விரும்பவில்லை என்பதற்கு சரியான காரணங்கள் முன் வைக்கப்படாது போனாலும், கோட்டபய ராஜபக்ஷ மற்றும் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் விடயத்தில், அமெரிக்கா சில முரண்பாடான நகர்வுகளை முன்னெடுக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இவர்கள் இருவரும் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் நேரடியாகத் தொடர்புபட்ட போர்க்குற்றவாளிகள் என குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா பயணத் தடைகளை விதித்திருக்கிறது. அவர் அதிலிருந்து வெளியேற விரும்புவார் என்பதில் சந்தேகம் இல்லை.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A,
MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.